GOKULAM

மார்ச் 2009 ✧ விலை ரூ.8/- ✧ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!







தூரிகை மொழி!



ஜெயிப்பது நிஜம்!

சாதனைப் பயணம்!



கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


901


902



903


904


905


906


907


908


909


910


911


912


913


914


915


916


917


919


919


920


921


922


923


924


925

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

மார்ச் 2009 மலர் : 27 இதழ் : 2

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்



வெற்றியின் வழி !

வெற்றிச் செய்திகளைக் கேட்டு சந்தோஷப்படுகின்ற தருணம் இது. டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் மகேஷ் பூபதி - சானியா மிர்சா ஜோடி ஆஸ்திரேலியன் ஓப்பன் 'கிராண்ட் ஸ்லாம்' பட்டம் வென்றிருக்கிறார்கள். ஜூனியர் டென்னிஸில் யூகி பாம்ப்ரி 'கிராண்ட் ஸ்லாம்' பட்டம் வென்றிருக்கிறார். கிரிக்கெட்டில் இந்திய அணி, இலங்கைத் தொடரைக் கைப்பற்றி இருக்கிறது.

விளையாட்டில் இப்படி என்றால், இசைத் துறையில் ஏ.ஆர்.ரஹ்மான் கோல்டன் குளோப், பாப்டா விருதுகளைப் பெற்று, ஆஸ்கரை எட்டிக் கொண்டிருக்கிறார்.

இத்தகைய வெற்றிச் செய்திகளை உற்றுக் கவனியுங்கள்.




இவற்றின் அடிப்படையாக இருப்பது மிகுந்த ஆர்வம்; கூர்மையான கவனம்; தொடர் பயிற்சி மற்றும் ஆழ்ந்த நம்பிக்கை!

பள்ளி இறுதித் தேர்வுகள் சமீபித்து விட்ட இந்தத் தருணத்தில், உங்களுக்கு வெற்றியை தரப் போவதும் இவைதான்!


எனவே, படிப்பில் ஆர்வம் கூடட்டும்; கவனம் பெருகட்டும்; பயிற்சி தொடரட்டும்; நம்பிக்கை வளரட்டும். வெற்றிக்கான வழி இதுதான்!

– அன்புடன்
கோகூ



‘சிட்டி’ல வாழலாம். ஆனா, ‘எலக்ட்ரிசிடி’ல வாழ முடியுமா?

- ஈ.பிரேமா, எட்டாம் வகுப்பு, பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோபி




லைப்ரரி முழுக்க நூலா இருக்கும்; ஆனா அதை வைத்து துணி தைக்க முடியாது.

- க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி

புள்ளிமானுக்கு உடம்பெல்லாம் ‘புள்ளி’ இருக்கும். அப்படின்னா கன்னுக்குட்டிக்கு உடம்பெல்லாம் ‘கண்’ இருக்குமா?


- பாத்திமா, இராமநாதபுரம்




‘கண்’ணுக்குட்டி?

தீப்பெட்டியை உரசினால் தீ வரும் கல்லாப் பெட்டியை உரசினால் கல் வருமா?

- ஒய்.ரவீராகுல், ஈரோடு





கீரைவடையை கீரையால் செய்யலாம்; அதுக்காக ஆமை வடையை ஆமையால் செய்ய முடியாது.

- சி.கண்ணன், திருவண்ணாமலை



தண்ணீர்மேல் படகு போனால் உல்லாசம்;
படகுமேல் தண்ணீர் போனால் கைலாசம்?!

மெழுகில மெழுகுவர்த்தி செய்யலாம்; அதனாலே,
கொசுவுலே கொசுவர்த்தி செய்ய முடியுமா?

- இ.நந்தகுமார்,
வைரவிழா மேல்நிலைப் பள்ளி,
கோபி



கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன், பா.கோபால்

தொலைபேசி:
044 - 4343 8888
(30 lines)

தொலைநகல்:
044 - 4343 8899

மின்னஞ்சல்:
ஆசிரியர் குழு:
tamilgokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு:
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு:
info@kalkiweekly.com

சந்தா விவரம்:
உள்நாடு:
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்):
ஒரு வருடம் : ரூ. 1000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!



கவர் ஸ்டோரி

தூரிகை

சுவாமி விவேகானந்தர் கம்பீரமாக கைகளைக் கட்டியபடி நிற்கிறார். முழங்கால் மடித்து அமர்ந்திருக்கிறார். ஸ்ரீராமகிருஷ்ணரிடம் பேசிக் கொண்டிருக்கிறார். தியானத்தில் ஆழ்ந்திருக்கிறார். சிகாகோ சர்வமத சபையில் உரையாற்றுகிறார். தன் ஆடைகளை தானம் கொடுக்கிறார்...

இப்படி விவேகானந்தரின் வாழ்க்கை தொடர்பான பல்வேறு காட்சிகளை வெளிப்படுத்துகின்றன அந்த ஓவியங்கள்.

லைன் டிராயிங் எனப்படும் கோட்டு ஓவியங்கள், வாஷ் டிராயிங்,

ஆர்.எஸ். ராகவன்

கொலாஜ், ஆயில் பெயிண்டிங், பென்சிலால் வரைந்தது, அவுட்லைன் ஸ்கெட்ச், சம்கி வொர்க், இலைகளில் வரையப்பட்டது, கைகள் இன்மையால் காலிலும், வாயிலும் பிரஷ் பற்றி வரைந்தது, எம்பிராய்டரி, ரத்தத்தால் வரைந்தது... என்று விதவிதமான ஓவியங்கள் கண்களைக் கவர்கின்றன; அனைத்திலும் மையப் புள்ளியாக விளங்குபவர் சுவாமி விவேகானந்தர்!

'நாகரிகமற்ற மக்கள் வாழும் நாடு' என்று இந்தியாவைப் பற்றி உலக நாடுகள் கொண்டிருந்த எண்ணத்தை மாற்றியவர் சுவாமி விவேகானந்தர்தான். சிகாகோவில் நடைபெற்ற சர்வசமய மாநாட்டில், இந்தியாவைப் பற்றியும், இந்திய தத்துவங்களைப் பற்றியும் உலகுக்கு ஒரு புதிய பார்வையை அளித்தார் சுவாமிஜி.

அவருடைய பிறந்த தினம்தான் தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதை முன்விட்டு ஆண்டுதோறும் போட்டிகளை நடத்தி வருகிறது ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் மாத இதழ். அதேபோல், இந்த ஆண்டு ஓவியப் போட்டி













மொழி!



என்பதுதான் ஒவ்வொரு ஓவியரின் கனவுமாக இருக்கும். இவர்களுக்கு அந்த வாய்ப்பு சுலபமாகக் கைகூடிவிட்டது'' என்றார்.

சினிமா, டி.வி. என்று ஊடகங்களின் பொழுது போக்கு அம்சங்களை மீறி 20,300 பேர் இந்தப் போட்டியில் கலந்து கொண்டதே ஓர் ஆச்சர்யம்! சுவாமிஜி கேட்டது 200 பேர்தான்! ஆனால் கலந்து கொண்டவர்கள் நூறு மடங்கு அதிகம்!

அறிவிக்கப்பட்டது. இந்தப் போட்டியில் தமிழகத்தில் இருந்து மட்டுமல்ல; உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அந்தப் போட்டியாளர்கள் வரைந்த பல்வேறு ஓவியங்களில் இருந்து 502 ஓவியங்கள் தேர்வு செய்யப்பட்டு, சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள ஸ்ரீவிவேகானந்தர் இல்லத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இரண்டாம் வகுப்பு பயிலும் மாணவியில் இருந்து முதுகலை வகுப்பு பயிலும் மாணவர் வரையில் இந்தப் போட்டியில் பங்கு பெற்றனர் என்பது சிறப்பம்சம்! இவர்களில்பெரும்பாலோர் முதன்முறையாக ஓவியம் வரைந்தவர்கள்; போட்டியில் பங்கு பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓவியர் ம.செ. பேசும்போது, 'இந்தப் போட்டியாளர்கள் அனைவருமே அதிர்ஷ்டசாலிகள், ஏனென்றால், தன்னுடைய ஓவியங்களைக் கொண்டு கண்காட்சி அமைக்க வேண்டும்'

இந்தக் கண்காட்சியைப் பார்வையிட வந்த ஒரு பள்ளி மாணவி சொன்னாள். 'நானும் போட்டியில கலந்துகிட்டேன். ஆனா, இதையெல்லாம் பாக்கும்போது, இனிமேதான் நான் வரைய கத்துக்கணும்னு புரியுது. நிச்சயம் கத்துப்பேன்!''

அட! 'நேர்மறை எண்ணங்களை வளர்த்துக்கொள். அதுவே உன் ஆற்றலை வளர்க்கும்' என்ற சுவாமிஜியின் சொற்களை நினைவுபடுத்துகின்றன, அந்தச் சிறுமியின் வார்த்தைகள்! ●

அட்டை,
படங்கள் :
ஸ்ரீஹரி



ஆர்.எஸ்.ஆர்.

தேர்வு



ஜெயிப்பது நிஜம்!

பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்புக்கான பொதுத் தேர்வு அட்டவணைகள் வெளியாகிவிட்டன. 'தேர்வுக்கான காலம் நெருங்கி விட்டது' என்ற அச்சமோ, கவலையோ கொண்டு தடுமாறி விடாதீர்கள். உங்களின் ஆற்றலைப் பாதிக்கக்கூடிய முதல் விஷயம் இதுதான்!

சரி; ஆற்றலை வெளிப்படுத்தக் கூடியவை என்ன என்று பார்க்கலாம்.

✸ நிதானமாகவும், முழுக் கவனத்தைச் செலுத்தியும் பாடங்களைப் படியுங்கள். ஏனென்றால், அதில் உள்ளதைத் தவிர, வேறு கேள்விகள், நிச்சயம் வரப் போவதில்லை. எனவே, படிக்கும்போது கவனமாகப் படித்துவிட்டால், தேர்வு பற்றிய அச்சம் அவசியமில்லை.

✸ கணிதம் கஷ்டமான பாடம் என்று கருதினால், மற்ற பாடங்களை விட அதற்கு கூடுதல் நேரம் ஒதுக்கி பயிற்சி செய்யுங்கள். இதனால், கணிதத்தின் மீதான பயமும் குறையும்; மற்ற பாடங்களிலும் கவனச் சிதறல் ஏற்படாது.

✸ படிக்க வேண்டும் என்பது மற்றவர்கள் பாராட்டவோ அல்லது பெற்றோர் பெருமை அடையவோ இல்லை. நம்மை நாம் முறையாக வளர்த்துக் கொள்ளவே படிக்கிறோம் என்பதை மனத்தில் ஊன்றிக் கொள்ளுங்கள். ஏனென்றால், உங்கள் கல்வி வேறு எவராலும் அபகரிக்க முடியாத சொத்து!

✸ விளையாட்டு, சினிமா, தொலைக் காட்சி... ஆகிய பொழுது போக்குகளை எப்போதும் அனுபவிக்க முடியும். ஆனால், கல்வி என்ற செல்வத்தை குறிப்பிட்ட பருவத்தில் சேர்த்துவிட வேண்டும்.

✸ தேவையற்ற பதற்றங்களைத் தவிர்க்க வேண்டும். தேர்வுக்குப் புறப்படும் சமயத்தில் எதையும் தேடக்கூடாது. அட்டை, இரண்டு பேனாக்கள், பென்சில், ரப்பர், ஷார்ப்னர்... முக்கியமாக ஹால் டிக்கெட், இவற்றை முதல் நாளே எடுத்து வைத்துவிட வேண்டும்.

✸ மறுநாள் காலை என்ன தேர்வோ,



அட்டை, இரண்டு பேனாக்கள், ரப்பர், பென்சில், முக்கியமாக ஹால்டிக்கெட் இவற்றை முதல் நாளே எடுத்து வைத்துவிட வேண்டும்.

அதை முதல் நாள் ஒரு முறை பார்க்க வேண்டும். பார்த்ததை மீண்டும் மனத்தில் அசைபோட வேண்டும். இரவில் கண்விழிப்பதையோ, டி.வி. பார்ப்பதையோ அவசியம் தவிர்க்க வேண்டும்.

✱ சரியான பதிலை, தெளிவான கையெழுத்துடன், குறிப்பிட்ட நேரத்துக்குள் எழுதி முடிப்பதுதான் தேர்வின் அடிப்படை. அதனால், நிதானமான சிந்தனையும், விரைவான செயல்பாடும் தேர்வில் மிக அவசியம்.

✱ பயம் என்பது எச்சரிக்கை உணர்வாக இருக்கலாம். ஆனால், அது தடுமாற வைக்கக் கூடாது. அதனால், துணிவுடனும், தெளிவுடனும் தேர்வை எதிர்கொள்ளுங்கள்.

✱ ஓர் ஆண்டு முழுவதும் படித்ததில் இருந்து சில பகுதிகளில் சில வினாக்கள் மட்டுமே வரப்போகின்றன. எனவே, உங்களின் நேர்மறை எண்ணத்தை மிகுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

✱ வினாத்தாளை முழுமையாகப் படித்துவிட்டு, தெரிந்த விடைகளை முதலில் தெளிவாக எழுதுங்கள். எழுதியவற்றை வினாத்தாளில் டிக் ☑ செய்து கொள்ளுங்கள்.

✱ பரீட்சைக்குக் கிளம்பும்வரை புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்க வேண்டாம். அது, தேவையற்ற கவலையைத் தரும். நினைவுப் பகுதிகளைத் தடுமாறச் செய்யும்.

✱ தேர்வுக்கூடத்துக்குள் நுழையும் முன் சில நினைவுகளை எழுப்பிக் கொள்வது நல்லது.

❒ எல்லாப் பகுதிகளையும் நான் படித்திருக்கிறேன். எனவே, எந்தப் பகுதியில் கேள்வி வந்தாலும் என்னால் விடையளிக்க முடியும்.

❒ எந்தப் பாடத்தையும் நான் அலட்சியப்படுத்தவில்லை. அனைத்தையும் கூர்ந்து கவனமாகப் படித்திருக்கிறேன்.

❒ படித்திருக்கிற பகுதிகளை என்னால் தெளிவாக விவரிக்க முடியும்.

❒ என்னுடைய படிப்புக்கான நேரம் முழுமையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

இப்படி நினைத்தால், தேர்வுக் கூடம் உங்களை எந்த விதத்திலும் அச்சப்படுத்தாது. மாறாக, உங்கள் நினைவாற்றலைத் தூண்டி, விரைவாகச் செயல்பட வைக்கும்.

இந்த எண்ணங்களோடு செயல்படுங்கள். ஜெயிப்பது நிஜம்!



முனைவர் ஆசுரா

திரைப்படங்களுக்கு வழங்கப்படும் விருதுகளில் தலை சிறந்த விருதாகக் கருதப்படுவது 'ஆஸ்கர் விருது'தான்! 1921ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் இந்த விருது, இந்தியாவைப் பொறுத்தவரை எட்டாக்கனியாகவே இருந்து வந்திருக்கிறது. இந்த முறை அதுவும் வசப்படும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தி இருப்பவர் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான்.

'ஸ்லம்டாக் மில்லியனர்' என்ற படத்தின் இசையமைப்புக்காக இவர் 'கோல்டன் குளோப் விருது' பெற்றுள்ளார். இது ஆஸ்கருக்கு நிகராக மதிக்கப்படும் விருது. 1944ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் இந்த விருதைப் பெறும் முதல் இந்தியர் ஏ.ஆர்.ரஹ்மான்.

சாதனைப் பயணம்!

இந்தக் கோல்டன் குளோப் விருதை நிறுவி வழங்கி வருவோர் அமெரிக்காவைச் சேர்ந்த ஹாலிவுட் வெளிநாட்டுப் பத்தரிகைச் சங்கம் என்னும் அமைப்பாகும். பொழுதுபோக்குத் துறையில், குறிப்பாக திரைப் படம் மற்றும் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் புரிகின்ற சாதனைக்காக இவ் விருது வழங்கப்படுகிறது. அமெரிக்கா, வெளிநாடு என்னும் பாகுபாடில்லாமல், பெருவாரியான மக்களைப் பெரிதும் ஈர்த்த திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கே இவ்விருது வழங்கப்படுகிறது.



1950ஆம் ஆண்டு இந்த விருதைச் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விருதாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பொழுதுபோக்கு ஊடகத் துறையில் சர்வதேச அளவில் சாதிப்போருக்கு விருது வழங்க முடிவு செய்யப்பட்டது. இந்த அடிப்படையில் முதல் விருதை இயக்குநரும் தயாரிப்பாளருமான சிசில் டி.டிமில்லே அவர்கள் பெற்றார்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் வழங்கப்படும் இந்த 'கோல்டன் குளோப்' விருது, ஹாலிவுட்டில் வசிக்கின்ற தொண்ணூறு பத்திரிகையாளர்கள் அளிக்கின்ற வாக்குகளின் அடிப்படையில் வழங்கப் படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் நாளிலிருந்து டிசம்பர் முப்பத்தொன்றாம் நாள் வரை வெளியாகின்ற திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

'ரோஜா' திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமான ஏ.ஆர். ரஹ்மான், 'ரங்கீலா' திரைப்படத்தின் மூலம் இந்தியில் அறிமுகம் ஆனார். ஆங்கில நாடகங்களுக்கு இசையமைத்ததன் மூலம் ஹாலிவுட்டிலும் மேலை நாடுகளிலும் இவரின் புகழ் பரவியது.

'கோல்டன் குளோப்' விருதைத் தொடர்ந்து, பிரிட்டனில் இருந்து வழங்கப்படும் BAFTA விருதும் ரஹ்மானுக்குக் கிடைத்திருக்கிறது. சின்னஞ்சிறு வயதில் இருந்தே கீ-போர்டு வ்ாசிக்கப் பழகிய ஏ.ஆர். ரஹ்மானின் தந்தை சேகரும் இசையமைப்பாளர்தான். மலையாளத்தில் இருபதுக்கும் மேற்பட்ட படங்களுக்கு அவர் இசையமைத்துள்ளார்.

ஆரம்பத்தில் இளையராஜாவின் இசைக் குழுவில் கீ-போர்டு வாசிக்கும் கலைஞராக இருந்தவர் ரஹ்மான். சந்தோஷமான இந்தத் தருணத்தில் 'ஆஸ்கர் விருது கிடைக்குமா?' என்று கேட்டால், 'ஒரு விருது நிச்சயம் கிடைக்கும்' என்கிறார்.

காரணம், அவர் இசையமைத்துள்ள 'ஸ்லம் டாக் மில்லியனர்' திரைப்படம் பின்னணிஇசை,பாடல்இசை,இயக்கம், ஒளிப்பதிவு... என மொத்தம் பத்துப் பிரிவுகளில் ஆஸ்கர் விருதுக்குப் போட்டியிடுகிறது.



இதில் ஏ.ஆர். ரஹ்மான் மூன்று பிரிவுகளில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. நான்கு கோல்டன் குளோப் விருதுகளையும்,, பத்து BAFTA விருதுகளையும் வாரிச் சுருட்டியிருக்கிறது இந்தத் திரைப்படம்.

சமீபத்தில் இந்த திரைப்படத்தை பார்த்த ஆஸ்கர் விருதுக் குழுவினர் சிலர் 'நாங்கள் பார்த்த மிகச் சிறந்த படங்களில் ஒன்று இந்த ஸ்லம்டாக் மில்லியனர்' என்று பாராட்டியுள்ளனர். 'எல்லாப் பெருமைக்கும் காரணம் இயக்குனர் டானி பாயல்' என்கிறார் ரஹ்மான்.

இந்த இதழைப் படிக்கும் நேரத்தில் இந்தப் படத்துக்கும் ஏ.ஆர்.ரஹ்மானுக்கும் ஆஸ்கர் விருது கிடைத்திருக்கலாம். அப்படியே நிகழட்டும்!

இதோ ஒரு ஹீரோ!

ஆஸ்கருக்கு முன்மொழியப்பட்டிருக்கும் குறும் படம் 'ஸ்மைல் பிங்கி'. மேலண்ணப் பிளவுடன் பிறக்கும் இந்தியக் குழந்தைகள் அறுவை சிகிச்சை மூலம் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ள முடியும் என்கிற செய்தியைச் சொல்கிறது இந்தக் குறும்படம். இந்தப் படத்துக்கு இசையமைத்துள்ளவர் அமெரிக்காவில் வாழும் இந்தியரான பிரசன்னா.





திஸ் கலர் நோ கோ!

ஒருமுறை கஸ்தூரிபா காந்தி, திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திற்கு வருகை தந்தார். அங்கே கைத்தறித் துணிகளுக்குச் சாயம் போடும் வேலையை ஆசிரமத் தொண்டர்கள் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது, ஒரு துணியை எடுத்துப் பார்த்த கஸ்தூரிபா அருகிலிருந்த இராஜாஜியிடம் அந்தத் துணியைக் காட்டி, 'திஸ் கலர் கோ' என்றார். அதாவது 'இந்தத் துணி சாயம் போகுமா?' என்பதைத் தனக்குத் தெரிந்த கொச்சை ஆங்கிலத்தில் கேட்டார். அதைக் கேட்ட மற்ற அனைவரும் சிரித்தனர். ஆனால், இராஜாஜி அமைதியுடன், ''திஸ் கலர் நோ கோ!'' என்றார். மீண்டும் சிரிப்பொலி. கஸ்தூரிபா சற்று வெட்கத்துடன், 'நான் பேசிய ஆங்கிலம் தவறா?' என்று இராஜாஜியிடம் கேட்டார். அதற்கு இராஜாஜி, 'இல்லை, நீங்கள் பேசியதுதான் எளிமையான ஆங்கிலம். அது குழந்தைக்குக் கூடப் புரியும்'' என்றார். அதைக் கேட்டு கஸ்தூரிபா மிகவும் மகிழ்ந்தார்.

ஆங்கிலத்தில் மிகவும் தேர்ச்சி பெற்ற ராஜாஜி, 'மற்றவர்களின் அறியாமையை கேலி செய்யக் கூடாது' என்பதை இதன் மூலம் உணர்த்தினார்.



இந்தியாவின்

சுவாமி விவேகானந்தர் சிகாகோ சென்றிருந்த சமயம். ஒரு நாள்... பூங்காவில் இருந்த அவரை இரு இளைஞர்கள் இழிவுபடுத்த நினைத்தனர். அவர்கள் நம் புனித நூலான பகவத் கீதையின்மீது ஆங்கிலப் புத்தகங்கள் சிலவற்றை அடுக்கி வைத்தனர். பிறகு விவேகானந்தரிடம், ''பார்த்தீர்களா? உங்கள் பகவத் கீதை புத்தகம்கூட அடிமைப்பட்டுள்ளது. இதேபோலத்தான் இந்தியாவும்'' என்று கேலி செய்து சிரித்தனர்.

இதைக் கேட்ட சுவாமி விவேகானந்தர் பகவத் கீதை புத்தகத்தை அடியில் இருந்து உருவினார். உடனே, ஆங்கிலப்

கடிகாரம் வெந்ததா?




ஒருமுறை சர். ஐசக் நியூட்டன் தம் வீட்டில் தாமே சமையல் செய்து கொண்டிருந்தார்.
அப்பொழுது கோழி முட்டை ஒன்றை வேக வைக்க நினைத்தார். உடனே அடுப்பில் வெந்நீரைக் கொதிக்க வைத்த நியூட்டன், அதில் முட்டையைப் போடுவதற்குப் பதிலாகத் தன் கைக்கடிகாரத்தைக் கழற்றிப் போட்டுவிட்டார்.
ஒரு கையில் முட்டையைப் பிடித்துக் கொண்டு மறு கையில் புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்துவிட்டார்.
கையில் புத்தகம் இருந்தால், சுற்றிலும் நடப்பதெல்லாம் அவருக்கு மறந்துவிடும். அந்த அளவுக்குத் தீவிரமாகப் படித்துக் கொண்டிருப்பார். அப்பொழுது சமையலறைப் பக்கம் வந்த பணியாள், அவர் செய்வதைக் கண்டு, ''ஐயா! கடிகாரம் வெந்ததா?'' என்று கேட்டான்.

அப்பொழுதுதான் நியூட்டன் சுயநினைவுக்கு வந்தார். மறதியாக முட்டைக்குப் பதில் கைக்கடிகாரத்தை வெந்நீரில் போட்டு விட்ட விஷயம் அவருக்குப் புரிந்தது!

– பா.விக்னேசுவரன்,
குட்டம்

பெருமை!



புத்தகங்கள் அனைத்தும் சரிந்தன.

அதைக் காட்டி, ''இந்தியாவும், இந்தியனும் இல்லையெனில், நீங்களும் உங்கள் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பும் இவ்வாறுதான் சரியும்'' என்று கூறினார். அதைக் கேட்ட அந்த இரு இளைஞர்களும் தலை குனிந்தனர்.

– ரா.பிரதீப்குமார், உ. எண் : 264,
காமராஜ் மே.நி. பள்ளி, நம்பியூர்

மூன்று வகையான ஆட்சி முறைகளையே இன்று வரை உலகம் கண்டிருக்கிறது. ஒன்று, மன்னராட்சி–பரம்பரை வழி! அடுத்தது, மக்களாட்சி–தேர்தல் வழி! இன்னொன்று, சர்வாதிகார ஆட்சி–பெரும்பாலும் ராணுவத்தின் வழி! அப்படிப்பட்ட சர்வாதிகாரிகளால், சில நாடுகளும் மக்களும் பட்டபாடு, கொஞ்ச நஞ்சமல்ல. அப்படிச் சிலரை அறிந்து கொள்வோம்.

தனிவழித்

: கௌதம்ராம்

● இரண்டாம் உலகப் போர் துவங்குவதற்குக் காரணம் ஹிட்லர்தான். முதல் உலகப் போரில் ஜெர்மனி கடும் தோல்வியைச் சந்தித்தது. அதற்குக் காரணம் யூதர்களே என நினைத்தார் ஹிட்லர். அதனால் யூத இனத்தையே பூண்டோடு ஒழித்துக் கட்டும் நோக்கத்துடன் குறி வைத்துத் தாக்கினார். அதைச் செயல்படுத்துவதற்காகவே, ஹிட்லர் ஆட்சியில் ஒரு தனி அமைச்சரகம் இருந்தது. 'கேஸ் சேம்பர்' முறையில் யூதமக்களை ஒரு அறைக்குள் அனுப்பி, அந்த அறையின் கதவுகளை சாத்திவிட்டு, உள்ளே விஷ வாயுவைச் செலுத்திக் கொன்ற கொடூரம் வரலாற்று பயங்கரம்! தன்னுடைய துவேஷத்தால் ஒரு இனத்தையே அழிப்பதில் ஈடுபட்ட ஹிட்லர், கடைசியில் தற்கொலை செய்துகொண்டு இறந்தார்.



● ஹிட்லரின் ஆதரவாளராக-கைப்பாவையாக இத்தாலியில் செயல்பட்ட முசோலினி, ஹிட்லரைப் போல போர்த்திறம் கொண்டவரில்லை. அவரது படைகள் வெற்றியைவிட அதிகமான தோல்விகளையே சந்தித்தன. ஆனால் ஹிட்லரின் படைகள் உதவிக்கரம் நீட்டியதால் முசோலினி தன்னை ஒரு பெரிய தலைவராக உலகுக்குக் காட்டிக் கொண்டார். ஒரு முறை எதிரிப் படைகளால் சிறைபிடிக்கப்பட்ட முசோலினியை, ஹிட்லரின் பாராசூட் படைவீரர்கள் அதிரடித் தாக்குதல் நடத்தி மீட்டார்கள். ஆனால், 1945ல் பழைய துணி மூட்டைகளுக்கு இடையில் பதுங்கி இருந்த முசோலினியையும், அவரது காதலியையும் எதிர்ப்பாளர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்கள்.

* ருஷ்யப் புரட்சியின்



தலைவர்கள்!

போது தனக்கு பக்க பலமாக இருந்த ஜோசப்புக்கு 'ஸ்டாலின்' - அதாவது 'இரும்பு மனிதர்', என்று பெயர் சூட்டி கௌரவித்தார் லெனின். பின்பு, அவரை ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஆக்கினார். அந்த ஸ்டாலின், தன்னை நிலைப் படுத்திக் கொள்ள, தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிர்ப்பாளர்களை ஒழித் துக் கட்டினார். நிலச் சீர்திருத்தம் என்ற பெயரில் நிலப்பிரபுக்கள் கொலை; தொழிற்புரட்சி என்று சொல்லி, சவுக்கால் அடித்து வேலை வாங்குதல்... என அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார் ஸ்டாலின். இவற்றை விட, தனக்கு கெட்ட பெயர் வந்துவிடக் கூடாது என்று, தனது ஆணைகளை நிறைவேற்றிய அதிகாரிகளுக்கும் மரணதண்டனை அளித்தார் ஸ்டாலின். 1953ல் ஸ்டாலின் மரணமடைந்தபோது நிம்மதிப் பெருமூச்சு விட்ட ருஷ்யர்கள் ஏராளம்.'







✱ ராணுவத்தில் சமையல்காரராக இருந்த இடி அமீனை ராணுவத் தளபதியாக்கினார், உகாண்டாவின் ஜனாதிபதியாக இருந்த மில்டன் ஓபோட். அதன் விளைவு? 1971ல், ராணுவப் புரட்சி செய்து, ஓபோட்டை விரட்டியடித்துவிட்டு, உகாண்டாவின் அதிபரானார் இடி அமீன். 'மனித மாமிசம் கூடச் சாப்பிடுவார் இடி அமீன்' என்று சொல்வார்கள். எழுதப் படிக்கத் தெரியாத ஒரு சராசரி மனிதனிடம் அதிகாரம் கிடைத்தது. அதனால் அவர் நடத்திய கொடூரங்களுக்கு அளவில்லை. நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்தது. மக்கள் போர்க்கொடி தூக்கினார்கள்.

விடையைச் சொல்; பரிசை வெல்-19ல் கலந்துகொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1.டோலக், 2.புருஸ், 3.உசைன் சாகர், 4.எபிகிராபி, 5.பிரான்ஸ்

பரிசு பெறுவோர் :

1.து.வர்ஷா, சென்னை



2.வி.எஸ்.வைஷ்ணவி, ஓசூர்
3.ப.சனத்குமார், திருப்பத்தூர்
4.ந.பிருந்தா, மயிலாடுதுறை
5.ப.சண்முகப்பிரியா, திருவாரூர்
6.நா.ஸ்ரீநிதி கண்ணம்மா, தேனி
7.கோ.அனுஷா, களக்காடு
8.ஜெ.உ.அமரபாரதி, திருவண்ணாமலை
9. ஜோ.விஷ்ணு ஆதித்தியன், ஈரோடு
10.ஆர்.அரவிந்த், நாகப்பட்டினம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்! கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

அதனால் தன்னை எதிர்த்த சாமானிய மக்கள், அமைச்சர், தலைமை நீதிபதி... என்று சுமார் மூன்று லட்சம் பேரைக் கொன்று குவித்தார் அவர். உகாண்டாவிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டு, சௌதி அரேபியாவில் தஞ்சம் அடைந்த இடி அமீன் 2003ல் கடும் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

● 'கம்போடியா ஒரு விவசாய நாடு; இங்கே, வயலில் இறங்கி வேலை பார்க்கும் விவசாயிகள்தான் தேவை; அரசு ஊழியர்களோ, ஆசிரியர்களோ, வியாபாரிகளோ அவசியமில்லை" என்று அனைவரையும் கிராமப்புறங்களுக்கு விரட்டி அடித்த போல்பாட் கம்போடியாவின் சர்வாதிகாரி. காகிதப் பணம் தேவை இல்லை என்று அறிவித்து, நாட்டின் வங்கிகளை தரை மட்டமாக்கினார். இறுதியில் வியட்னாம் படையினரால் விரட்டி அடிக்கப்பட்ட போல்பாட், காட்டுக்குள்ளே சிறை வைக்கப்பட்டு, அங்கேயே இறந்தார்.

சர்வாதிகாரிகள் என்றவுடன் அந்தக் காலம் என்று நினைத்துவிட வேண்டாம். பாகிஸ்தானில் ஜியா-உல்-ஹக், ஃபிலிப்பைன்ஸின் மார்கோஸ், வட கொரியாவின் இரண்டாவது கிம்ஜோங், ஜிம்பாப்வேயின் ராபர்ட் முகாபே... என்று இன்னும் பலர் சர்வாதிகாரிகள் என்னும் பட்டியலில் வருகிறார்கள்.

ஆனால், பெண் சர்வாதிகாரிகள் என்று யாரும் வரலாற்றில் இடம் பெறவில்லை என்பது ஓர் ஆச்சர்யம். தவிர, எந்த சர்வாதிகாரியும் மக்களின் ஆதரவைப் பெறவில்லை என்பதும் சந்தோஷப்படுத்தும் செய்தி!



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 032

இலவசம் வேண்டாம்!

அது, தைவான் நாட்டிலுள்ள மலையோரக் கிராமம்! ஒருநாள்...

''காரவடை வாங்கலியோ, காரவடை! ஒரு ரூபாய்க்கு ஒன்று, இரண்டு ரூபாய்க்கு இரண்டு. மூன்று வாங்கினால் இலவசம்! காரவடை வாங்கலியோ, காரவடை!''

வடை வியாபாரியின் வித்தியாமான கூவலைக் கேட்டு, மக்கள் வீடுகளில் இருந்து வெளியே வந்தனர். வியாபாரியைச் சூழ்ந்துகொண்டனர்.

மக்களில் சிலர் முணுமுணுத்தனர்: ''சொல்வது உண்மைதானா? அல்லது இந்தக் கிழவன் ஏமாற்றுகிறானா? அது வடையா அல்லது வேறு பண்டமாய் இருக்குமா?''

கிராம நாட்டாமை ஓடி வந்தார். முதலாவதாக அவர் மூன்று வடைகளை வாங்கித் தின்றார். ''ஆகா, சூடான வடை! சுவையான வடை!'' என்று வியந்து கூறினார். உடனே எல்லாரும் மூன்று வடைகளை வாங்கித் தின்றனர். மிக விரைவில் அவன் வடை கொண்டு வந்த கூடை காலியானது. கிழவர் கூடையை எடுத்துக் கொண்டு நடையைக் கட்டினார்.

ஆனாலும், மக்களின் வடை ஆசை தீரவில்லை. அதன் சுவை நாவில் நீர் ஊற வைத்தது. அவர்கள் வடைவியாபாரியைப் பற்றியே பேசினர். ''மூன்று வடை வாங்கினால் இலவசம் என்று எந்த மடையனாவது வியாபாரம் செய்வானா? இதை நம்பவே முடியவில்லை? வடையைக் கொடுத்துவிட்டு அவன் சும்மா செல்கிறானே! இது



நாடோடிக் கதை

எப்படி முடிக்கிறது?''

''அங்க வடை மிகவும் ருசியாக இருந்தது! அதை எந்த மாவில் செய்திருப்பான்? அவன் எங்கிருந்து வருகிறான்? தினமும் அவன் வந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்?'' இப்படி மக்கள் பேசினர்.

இரண்டாவது நாளும் கிழவர் வடை கொணர்ந்தார். காத்திருந்த மக்கள் ஈக்களைப் போல் அவனை மொய்த்துக் கொண்டனர். சில நிமிடங்களில் அனைத்தும் காலியானது. கிழவர் வெறும் கூடையுடன் திரும்பிச் சென்றார்.

மூன்றாவது நாளும் கிழவர் வடையுடன் வந்தார். ''வடை வாங்கலியோ, வடை! ஒரு ரூபாய்க்கு ஒன்று. இரண்டு ரூபாய்க்கு இரண்டு, மூன்று வாங்கினால் இலவசம்!'' என்று கூவினார்.



வழக்கம்போல மக்கள் ஓடோடி வந்தனர். ஒவ்வொருவரும் மூன்று வடைகளை இலவசமாய் வாங்கி உண்டனர்.

அப்போது, ''ஐயா, எனக்கு ஒரு வடை தாரும்'' என்றான் ஓர் இளைஞன். அவன் குரலைக் கேட்டு அனைவரும் ஆச்சரியப்பட்டனர். ''இவன் சரியான ஏமாளி'' என்று எண்ணினர்.

''தம்பி, நான் சொன்னதை நீ புரிந்து கொள்ளவில்லையா? ஒரு வடை ஒரு ரூபாய். இரண்டு வடை இரண்டு ரூபாய், மூன்று வடை வாங்கினால் அவை மூன்றும் இலவசம். எல்லாரும் மூன்று வடை வாங்கினர். நீ மட்டும், மூன்று கேட்காமல் ஒன்று கேட்கிறாயே!'' என்றார் அந்த வடை வியாபாரி.

''ஐயா, ஒவ்வொரு நாளும், மிகுந்த சிரமத்துடன் , நீர் வடையைச் சுமந்து வருவதைப் பார்த்தேன். ஆனால் இறுதியில் பணம் பெற்றுக் கொள்ளாமல் திரும்பிச் செல்கிறீர். உம்மேல் எனக்கு இரக்கம் உண்டாகிறது. தவிர காசு இல்லாமல் இலவசமாய் எதையும் வாங்கும் பழக்கம் எனக்குக் கிடையாது. இப்போது என்னிடம் ஒரு ரூபாய் மட்டுமே இருக்கிறது. எனவே ஒரு வடை கேட்கிறேன்'' என்றான் அந்த இளைஞன்.

அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, பேராசை கொண்ட மக்கள் அனைவரும் வெட்கித் தலை குனிந்தனர்.

அப்போது அந்தக் கிழவர், ''ஆகா! உன்னைப் போன்ற பேராசையற்ற, ஒரு நல்ல மனிதனைத் தேடித்தான் நான்

லூர்து எஸ். ராஜ்

இங்கு வந்தேன். அதோ அந்த மலையில் இருந்தபடி இந்தப் பகுதி முழுவதையும் காப்பாற்றும் தெய்வம் நான். உன்னை என் சீடனாக்கி எனது எல்லா வல்லமை யையும் உனக்கு தரப் போகிறேன்'' என்றார்.



> “உன்னைப் போன்ற - பேராசையற்ற, நல்ல மனிதனைத் தேடித்தான் நான் இங்கு வந்தேன்”

அதோடு, 'அந்த வடைகள் உண்மை யான வடைகள் அல்ல; மலையிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட மண்ணால் செய்யப்பட்டவை' என்றும் சொன்னார்.

மக்கள் அனைவரும் தட்டில் இருந்த மீதி வடைகளைப் பார்த்தனர். அவை அனைத்தும் மண் கட்டிகளாய் இருந்தன. பேராசைப்பட்டு மூன்று, ஆறு, ஒன்பது என்று வடைகளைத் தின்றவர்கள் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தனர்.

கிழவனாக வந்த தெய்வம், அந்த இளைஞனை அன்புடன் அணைத்து அழைத்துச் சென்றது. சில வினாடிகளில் அவர்கள் மக்களின் பார்வையில் இருந்து மறைந்தனர். அன்று முதல் அந்தக் கிராம மக்கள் பேராசைப்படுவதேயில்லை. ●



டியர் குட்டீஸ்...

டியர் குட்டீஸ்...

கீழே குறிப்பிட்டுள்ள உறுப்பினர் களின் அட்டைகள் திரும்ப வந்துள்ளன. இவர்கள் சரியான முகவரியை எழுதி அனுப்பி உறுப்பினர் அட்டையைப் பெறலாம்.

143. ச.ராஜலட்சுமி, எட்டாம் வகுப்பு, புனித கபிரியேல் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பசுபதிகோயில்.

275. எம்.ஷிவாணி, ஆறாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ண குருகுலம் மெட்ரிக் பள்ளி, உளுந்தூர்பேட்டை

280. சி.பிரபு, ஆறாம் வகுப்பு, குறிஞ்சி தேசிய ஆரம்ப தமிழ்ப் பள்ளி, சிலாங்கூர், மலேசியா.

330. ஸ்ரீபத்மஸ்ரீ, 6ஆம் வகுப்பு, ரோஹினி மெட்ரிக் பள்ளி, சென்னை

400. அ.நிரஞ்சன், ஆறாம் வகுப்பு, டாக்டர் ராஜலட்சுமி சுந்தரராஜன் மேல்நிலைப் பள்ளி, சென்னை

414. அ.ஸம்ஹிதா, ஒன்பதாம் வகுப்பு, ஆதர்ஷ் வித்யாலயா, சென்னை

425. சி.கோகுலன், ஆறாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, கோவை

450. ஜி.அஜர் அரவிந்த், நான்காம் வகுப்பு, ஏ.ஆர்.எல்.எம்.மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, கடலூர்

502. ப.ஆகோஷ், எஸ்.என்.எம். பள்ளி, ஆலாந்துறை

527. வி.செல்வகுமரன், எட்டாம் வகுப்பு, மாரிமுத்து நாடார் மேல்நிலைப் பள்ளி, விளாம்பட்டி

536. ரா.மோகன், எட்டாம் வகுப்பு, செயின்ட் மேரீஸ் மேல்நிலைப் பள்ளி, கும்மிடிப்பூண்டி

ஆல்ரவுண்டர் அசோக்!




''டாக்டர் நான் ஒரு பல்லை முழுங்கிட்டேன்!''
''அப்படியா, இப்ப எப்படி இருக்கு?''
''வயிறு எரியுது டாக்டர்!''

- லோ.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி

''அசோக்தான் எங்க கிளாஸ்ல ஆல் ரவுண்டர்.''
''என்ன சொல்றே?''
''புரியலையா? எல்லா பாடத்துலயும் சைஃபர் மார்க் வாங்குவான்.''

- ஜே.தனலட்சுமி, கோவை



''சர்வர், ஒரு பேப்பர் ரோஸ்ட் கொண்டு வாங்க.''
''ரூல்ட்-ஆ இல்ல, அன்-ரூல்டா சார்?''

- எஸ்.சந்தான லஷ்மி, உ. எண் : 428, கோவை




''நான் கழுதை மாதிரி கத்திக்கிட்டிருக்கேன். நீ அங்கே என்ன பண்ணிக்கிட்டிருக்க?''
''உங்களுக்குத்தான் பேப்பர் தேடிகிட்டிருக்கேன்!''

''டாக்டர், நாய் கடிச்சிடிச்சு!''
''எந்த இடத்துலே கடிச்சது?''
''பெருமாள் கோயில் சந்துல...''

- பா.கணேசன், உ. எண் : 467, எட்டாம் வகுப்பு, முத்தாலம்மன் இந்து உயர்நிலைப் பள்ளி, தேனி





தலைவலி வருவது



“தலைவலியா, ஒரு 'மெட்டாசின்' போட்டுக்கோ!” என்று வீட்டில் சொல்வதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பெரியவர்களுக்கும் சரி; குழந்தைகளுக்கும் சரி; மிக அதிகமாகக் காணப்படும் ஆரோக்கியப் பிரச்னைகளில் தலைவலி முதன்மையானது. காய்ச்சலைப் போலவே தலைவலியும் ஒரு நோயின் அறிகுறியே. பெரும்பாலான தலைவலிக்குக் காரணமே இருக்காது என்பதுதான் ஆச்சர்யமான விஷயம். அவற்றை 'சாதாரண தலைவலி' என்கிறோம். அதேநேரத்தில் ஆபத்தான தலைவலிகளும் உள்ளன.


டாக்டர் கு. கணேசன்

தலைவலி எப்படி வருகிறது?

உடலில் தொற்றுக்கிருமிகள் அழற்சியை ஏற்படுத்தும்போதும், இரத்தத்தில் 'செரட்டோனின்', 'குளுட்டமேட்' போன்ற சில வேதிப் பொருள்கள் அதிகமாக உற்பத்தியாகும்போதும், அவை மூளையில் உள்ள இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்கின்றன. அப்போது அருகில் உள்ள நரம்புகள் அழுத்தப்படுகின்றன. இதன் விளைவாக, மூளைக்குள் நரம்புகள் தூண்டப்படும்போது, தலையில் வலிப்பது போன்று ஓர் உணர்வு உண்டாகிறது. இதுதான் தலைவலி.

தலைவலியைத் தூண்டும் காரணிகள் :

மன அழுத்தம், உறக்கமின்மை, சோர்வு, சில வகை உணவுகள், புகை பிடித்தல், மது அருந்துதல், மாசடைந்த சுற்றுச்சூழல், செயற்கை வாசனை திரவியங்கள், கடுமையான ஓசை,



காற்றோட்டமில்லாத அறை, அதிக வெளிச்சம், விட்டு விட்டு ஒளிரும் விளக்குகள் போன்றவை தலைவலியைத் தூண்டும் காரணிகளில் முக்கிய மானவை.

தலைவலிக்குக் காரணங்கள் :

சாதாரண காய்ச்சலில் இருந்து ஆபத்தான மூளைக்கட்டிகள் வரை காய்ச்சலுக்குப் பல காரணங்கள் உண்டு. குறிப்பாக வைரஸ் காய்ச்சல்கள் எல்லாமே தலைவலியை ஏற்படுத்தும். 'சைனஸ்' என்று அழைக்கப்படும் முகக்காற்றறைகளில் அழற்சி ஏற்பட்டால் தலைவலி வரும். இரத்தசோகை, ஊட்டச்சத்துக் குறைபாடு, கண்பார்வைக் குறைபாடு, மூளைக்காய்ச்சல், மூளைக் கட்டி, பல்நோய், காதுநோய், தொண்டைநோய் போன்றவையும் தலைவலியை ஏற்படுத்தும். தலையில் அடிபட்டாலும் தலைவலி வரும். அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பது, கம்ப்யூட்டர் விளையாட்டுகளை விளையாடுவது போன்றவையும் தலைவலிக்குக் காரணமாகலாம். பசி கூட தலைவலியை உண்டாக்கும். குறிப்பாக பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் காலை உணவைச் சாப்பிடாமல் சென்றால் வகுப்பறையில் தலைவலிக்கும்.

தலைவலியின் வகைகள் :

மன அழுத்தத் தலைவலி, ஒற்றைத் தலைவலி, கொத்துத் தலைவலி என்று தலைவலியில் பல வகை உண்டு.

மன அழுத்தத் தலைவலி :

பெரியவர்களைப் போலவே, குழந்தைகளுக்கும் மன அழுத்தம் காரணமாக தலைவலி வருவது இப்போது அதிகரித்து வருகிறது. தேர்வு பயம், கற்பதில் சிரமம், அதிக மதிப்பெண் பெற வேண்டும் என்ற உந்துதல், குடும்பப் பிரச்னைகள் போன்றவற்றை இதற்குக் காரணங் களாக் கூறலாம்.

ஒற்றைத் தலைவலி :

தலையின் முன்புறத்தில் ஒரு பக்கம் மட்டும் வலிப்பது இதன் முக்கிய அறிகுறி. அதிக ஒளியைப் பார்த்தால் கண் கூசுவது, மங்கலான பார்வை,

விசித்திரமான ஒளிப்புள்ளிகள் தெரிவது, ஒரு கை மரத்துப்போவது, வாந்தி வருவது போன்றவை இதற்குரிய பிற அறிகுறிகள். ஒற்றைத் தலைவலி ஏற்படுகின்ற குழந்தைகளுக்குப் பய உணர்வு இருக்கும். அதிகமாகக் கோபம் வரும். அடிக்கடி உணர்ச்சிவசப்படு வார்கள்.

கொத்துத் தலைவலி :

கண்களைச் சுற்றிக் கொத்தாக வலிக்கும். குறைந்தது ஒரு மணி நேரம் வலி நீடிக்கும். தினமும் குறிப்பிட்ட நேரத்தில் தலைவலி வரும்.

சைனஸ் தலைவலி :

கண்களுக்கு மேலும் கீழும் வலி ஏற்படும். மூக்கில் சளி பிடிக்கும். மூக்கு அடைக்கும் அல்லது மூக்கு ஒழுகும்.

தலைவலியை உண்டாக்கும் சில உணவுகள் இவை :

சாக்லேட், ஊறுகாய், வாழைப்பழம், பாலாடை, எலுமிச்சை, நிலக்கடலை, முந்திரி, பாதாம், பர்கர், பீட்சா, கடல் உணவுகள், செயற்கை உணவுகள்.

டாக்டரை எப்போது பார்ப்பது?

✱ கடுமையான தலைவலி மற்றும் திடீரெனத் தோன்றும் தலைவலி

✱ காய்ச்சல், வலிப்பு, வாந்தி, கழுத்து விறைப்பு போன்றவை இருந்தால் உடனே டாக்டரைப் பார்க்க வேண்டும்.

தலைவலியைத் தவிர்க்க எட்டு வழி!

★ சத்துள்ள உணவை உண்ணுங்கள். குறிப்பாக பழம், காய்கறி, கீரைகளைச் சேருங்கள்.

★ தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள்.

★ போதிய ஓய்வும் உறக்கமும் தேவை

★ நீண்ட நேரம் கம்ப்யூட்டரைப் பார்க்கும் போதும், டைப் அடிக்கும்போதும் சரியான நிலையில் உட்காருங்கள்.

★ தொலைக்காட்சியை மிக அருகில் உட்கார்ந்து பார்க்காதீர்கள்; குறைந்தது பத்து அடி இடைவெளி தேவை.

★ படுத்துக்கொண்டே படிக்காதீர்கள்.

★ தியானம், யோகா, மூச்சுப் பயிற்சிகள் இவற்றை தினமும் செய்யலாம்.

★ தலைவலியைத் தூண்டும் காரணிகளைத் தவிருங்கள்.


8 வழி!


தலைவலிக்கு முதலுதவி :

பாராசிட்டமால், புரூஃபன் மாத்திரைகளில் ஒன்றைப் பயன்படுத்தி, போதிய ஓய்வெடுத்துக் கொண்டால் சாதாரண தலைவலி சரியாகிவிடும். அடுத்ததாக, தலையை சிறிது நேரம் அழுத்திக் கொடுக்கலாம். இளஞ்சூடான தண்ணீரில் துணியை நனைத்து ஒத்தடம் தரலாம். மனதை அமைதிப்படுத்த இனிய இசை கேட்கலாம். ●


கோகுலம்

டைஜிஸ்ட்





உள்ளே...





தேர்வுக்குள் தேர்வு 'மார்ச்தேர்வு' அத்தேர்வு
தேர்வுக்குள் எல்லாம் தலை.

தேர்வு நெருங்கிவிட்டது. மனத்தில் கவலை, அச்சம்... என்று பல்வேறு உணர்வுகள் பெருகுகின்றன. அதைமீறி, தேர்வை எப்படி எதிர்கொண்டால் வெற்றி பெறலாம் என்கிற எண்ணமும் புலப்படுகிறது. அதை வெளிப்படுத்துகின்றன இந்தக் 'குரல்'கள்.

எழுதின் தெளிவாய் எழுதுக; இன்றேல்
எழுதலின் எழுதாமை நன்று





தேர்வச்சம்!

த. மணிமோகன்,
பத்தாம் வகுப்பு,
அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி,
வெள்ளக்கோவில்.

மணிக்குள் எழுதி முடியாதார் என்கற்றும்
மார்க்குகள் மிக்க பெறார்

படித்தார் படியாதார் என்பது ஒருவர்
விடையினால் காணப் படும்





பொருளும் அழகும் பொருந்தின் விடைத்தாள்
மார்க்கும் அழகும் பெறும்

காப்பியடித்து பயனென் கொல் மற்றாங்கே
தேர்வில் பிடித்து விடல்



நன்கெழுதல் தேர்ச்சிக்கு வித்தாகும்; பார்த்தெழுதல்
என்றும் இடுக்கண் தரும்.

அழகாபுரி பெயருக்கேற்ற அழகான ஊர். கண்ணன் ஒரு நெசவாளி. தன் மனைவியுடன் அவ்வூரில் வசித்து வந்தான். குறைந்த வருமானத்தில் வாழ்க்கையை நடத்தி வந்த கண்ணனுக்கு ஒரு சோதனை ஏற்பட்டது.

ஒருநாள் அவன் தன் வீட்டில் அமர்ந்து தறி நெய்து கொண்டிருந்தபோது தறி உடைந்துவிட்டது. புதிய தறி செய்வதற்கு

என்ன வரம் வேண்டுமானாலும் தருகிறேன். கேள்!'' என்றது பூதம்.

உடனே கண்ணன், ''என் மனைவியிடம் கேட்டு வருகிறேன்'' என்று கிளம்பினான்.

வழியில் சந்தித்த நண்பன் தனிகா இந்தச் செய்தியை அறிந்தான். உடனே அவன் அரசாள ஒரு நாட்டைக் கேட்குமாறு ஆலோசனை கூறினான்.

கண்ணன் கேட்ட வரம்!



மரம் வெட்ட காட்டுக்குப் போனான். அடர்ந்த காட்டில், தேடி தறி செய்யப் பொருத்தமான ஒரு மரத்தைத் தேர்வு செய்தான். அதனை வெட்டத் துவங்கியபோது, அதனுள்ளிருந்த ஒரு பூதம் வெளிவந்தது.

''மானிடா! இந்த மரம் நான் குடியிருக்கும் இடம். தயவு செய்து இதை வெட்டாதே!'' என்றது.

''தறி செய்ய உகந்த மரம் இது ஒன்றுதான் உள்ளது. நான் என்ன செய்வது?'' என்று கேட்டான் கண்ணன்.

''உனக்கு நான்

பின் கண்ணன் தன் வீட்டையடைந்து மனைவியிடம் நடந்தவற்றைக் கூறினான். அவள் 'பொன், பொருள், செல்வம் - எல்லாம் குறையாமல் வேண்டும்' என்று கேட்கச் சொன்னாள்.

காட்டுக்குத் திரும்பிய கண்ணனோ, பூதத்திடம், ''என் தறி பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும். அதற்கு உதவி செய்!'' என்று வேண்டினான்.

பேராசையின்றி சுயமாக உழைக்க ஆசைப்பட்ட, கண்ணனை நோக்கிய பூதம் மகிழ்ந்தது. அவன் தறியை முன்பிருந்த நிலைக்கு மாற்றியதோடு, அவனுக்கு குறையாத செல்வத்தையும் வழங்கி வழியனுப்பியது.



எஸ். தணிகைவேல்,
பதினொன்றாம் வகுப்பு,
சே.சா.மு.ந.மே.நி.பள்ளி,
காஞ்சிபுரம்.

I. கீழ்கண்ட 7 கேள்விகளுக்கும் பதில்களின் முதல் எழுத்து 'கா'. விடைகள் 2, 3, 4, 5, 6, 7 மற்றும் 8 என்ற எழுத்துக்களில் முடிவடையும். எங்கே கண்டுபிடியுங்கள்?



1. பச்சைத் தங்கம் என்று அழைக்கப்படுவது...

2. பச்சையம் இல்லாத தாவரம்...

3. கண்ணில் உள்ள பாப்பா பாது காக்கப்படும் படலத்தின் பெயர்...

4. மிகப் பெரிய கொம்பு உள்ள மிருகம்...

5. ஏரி மாவட்டம் என்றழைக்கப்படும் மாவட்டம்...

6. உயிரினங்களில் மிக மெல்லிய தோல் உள்ள மிருகம்...

7. மயில் துத்தம் என்பதன் வேதியியல் பெயர்...

- சிவ.மணவழகி,
ஆதனூர்

II. கீழ்கண்ட வாக்கியங்களில் ஒவ்வொரு பெயர் பிரிந்துள்ளது. என்னவென்று கண்டுபிடியுங்கள்.

1. மோனிகா வீட்டு கொலு சுமார்தான்.

2. ருக்கு திரை மறைவில் பதுங்கினாள்.

3. மோகனின் தம்பி சுந்தரம் பம்பாயிலுள்ளான்.

4. பாலாஜி லேபில் ஒட்டும் வேலை செய்கிறான்.

5. சம்பத் துபாயில் பணிபுரிகிறார்.

6. வெங்கட் டில்லியிலிருந்து நேற்று வந்தான்.



7. புத்தகத்தில் படம் ஒட்ட கம் வேண்டுமென ராமு கேட்டான்.

8. செங்கல் கண்டு நாய் வேகமாக ஓடியது.

- என்.நர்மதா, உ. எண் : 635,
ஆறாம் வகுப்பு, குளுனி பெண்கள்
மேல்நிலைப் பள்ளி, புதுச்சேரி



III. 1. பார்வையற்ற நிலையிலும் அற்புதமான கவிதைகளை இயற்றிய மேல்நாட்டு கவிஞர்...

2. திருத்தொண்டர் திருவந்தாதியை இயற்றியவர்...

3. மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக மகாத்மா காந்தியின் உடலை

பச்சையம் இல்லாத



வைத்திருந்த இடம்...

4. இந்தியாவின் முதல் மகளிர் காவல் நிலையம் நிறுவப் பட்ட இடம்...

5. பழைமையான இந்திய அறுவை சிகிச்சை நிபுணர்...

6. 'மகாத்மா காந்தியின் ஊன்றுகோல்' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்...

7. அசோகரின் தந்தை...

8. 'வந்தே மாதரம்' என்ற பாடலை எழுதியவர்...

9. 'ஆசிய ஜோதி' என்ற நூலை இயற்றியவர்...

10. 'மைசூர்ப்புலி' என்று குறிப் பிடப்பட்டவர்...

- அ.சிந்துஜா, ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக்குலேசன் பள்ளி,
செஞ்சி





விடைகள் 56ம் பக்கம்

IV. ஒரு சிறுவன் சிலந்திகளையும், வண்டுகளையும் பிடித்து ஒரு பெட்டியில் போட்டான். இரண்டும் சேர்ந்து மொத்தம் எட்டு இருந்தன. அவற்றின் கால்களை எண்ணிப் பார்த்தான். மொத்தம் 54 கால்கள் இருந்தன. சிறுவன் பிடித்த வண்டுகள் எத்தனை? சிலந்திகள் எத்தனை?

- சு.அபிஷேக்,
உ. எண் : 518,
சென்னை

V.1.புகழ்பெற்ற 'வைஸ்மன் பல்கலைக் கழகம்' உள்ள நாடு?

2. 'யுனைடெட் பிரஸ் இண்டர் நேஷனல்' நிறுவனத்தின் தலைமை யகம் உள்ள இடம்?


3. இந்திய திரையுலகில் வழங் கப்படும் உயரிய விருது?


4. இந்தியாவின் உயரிய இலக் கியப் பரிசு?

5. லலித் கலா அகாடமி பரிசு எத்துறைக்கு வழங்கப்படுகிறது.

- த.அரவிந்த், ஐந்தாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக். பள்ளி, செஞ்சி

தாவரம்?





சமீபத்தில் விடுமுறையின்போது, கன்னியாகுமரி மற்றும் குற்றாலத்துக்கு சுற்றுலா சென்றிருந்தோம். வங்காள விரிகுடா, அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல் ஆகிய மூன்று கடல்களும் சங்கமிக்கும் குமரிமுனையில் நின்ற போது, மனம் சிலிர்த்துப் போனது. காஷ்மீரில் இருக்கும் பனி மூடிய மலைச்சிகரங்களே, இங்கு கடலாக இருப்பதாகத் தோன்றியது.

இந்தப் பகுதியில்தான், சிகாகோ மாநாட்டில் இந்தியாவின் பெருமையை உயர்த்திய சுவாமி விவேகானந்தரின் பாதங்கள் படிந்தன என்ற எண்ணம் மேலும் உற்சாகப்படுத்தியது. கடல் நடுவே அமைந்துள்ளது விவேகானந்தர் மண்டபம். படகில் சென்று அந்த மண்டபத்தைக் கண்டு மகிழ்ந்தோம். அந்த உற்சாகத்தை மேலும் அதிகப்படுத்தியது திருவள்ளுவரின் பிரமாண்டமான சிலை.

தமிழ் நூல்களிலேயே மிக அதிக மொழிகளில் மொழி பெயர்ப்பான திருக்குறளை இயற்றிய வள்ளுவர் பெருமானுக்கு, இப்படியொரு பெருமை செய்தது, நமக்குத்தான் பெருமை. அதைத் தொடர்ந்து குமரி அம்மனை தரிசித்துவிட்டுப் புறப்பட்டோம். 'சரேல் சரேலெ'ன்று அலைகள் மோதுகின்ற கன்னியாகுமரியின் சூர்யோதயக் காட்சி என்றென்றும் மறக்க முடியாத பேரழகு!

அடுத்து ''வானரங்கள் கனி கொடுத்து மந்தியோடு கொஞ்சு'கின்ற குற்றாலத்தை அடைந்தோம். இயற்கையாலும், ஆன்



வள்ளுவர் சிலை; அருவிக் கரை!




மீகத்தாலும், இலக்கியத்தாலும்கூட புகழ் பெற்ற நிலம். 'ஹோ'வென்ற இரைச்ச லுடன் விழும் அருவியையும், அந்த அருவி நீர் காற்றில் சிதறிப் பறக்கும் அழகையும் வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

சிற்றருவி, புலியருவி, ஐந்தருவி, பழத்தோட்ட அருவி, தேனருவி என்று குற்றாலத்தில் பல அருவிகள் உண்டு. மலையிலுள்ள மூலிகைகளின் மீது பாய்ந்து வரும் குளிர்ந்த நீர் மருத்துவ குணம் கொண்டது. தலையில் எண்ணெய் தேய்த்துக் கொண்டு போய் நின்றால், சடசடவென்று விழும் அருவிநீர் உடலுக்கு புத்துணர்ச்சி தருகிறது. குளித்துவிட்டு வந்தவுடன் உடலில் ஏற்படும் அந்த புத்துணர்ச்சியை அனுபவித்தால்தான் புரியும். குளிக்க குளிக்க ஆசை அதிகரிக்கிறதே தவிர, அருவியை விட்டு நகர மனமே வரவில்லை.

அங்குள்ள திருக்குற்றால நாதர் ஆலயம், மௌன சுவாமிகள் மடம் என்று ஆன்மிக தரிசனத்துக்கும் குறைவில்லை. திரிகூடராசப்ப கவிராயரின் 'குற்றாலக் குறவஞ்சி' கூறுவதுபோல வானரங்கள் இன்றும் கொஞ்சி விளையாடுகின்றன. புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும், சிந்தனைகளில் புத் துணர்வு பெருகவும் இப்படிப்பட்ட சுற்றுலாக்கள் அவசியம். நம் தமிழகத்தின் அழகை தெரிந்து கொள்ளாமல், நாம் இருப்பது சரியில்லைதானே!


எஸ். சௌம்யா,
உறுப்பினர் எண் : 190,
சென்னை.





யார் பலசாலி?


ஓவியம் : தர்மா

கதை : பா. முகுந்தன், ஐந்தாம் வகுப்பு, சீதாதேவி கரோடியா பள்ளி, தாம்பரம்.




அறைந்த சிங்கத்தின் மூக்கிலிருந்து ரத்தம் வழிய...
வா... வா... பலசாலி... நான் இப்ப உன் காதுல...
ஆ... ஐயோ...
ஒவ்.... ஏன் என்ன இப்படிப் பண்ற?
எதுக்காக அலர்றே? உன்னைப் பார்த்தா யானைகூட பயப் படுமே... நீ அலறலாமா...
கேலி செய்தது கனகு.
உனக்கு இப்ப என்ன வேணும்? ஏன் இப்படிச் செய்யறே
ம்... நீ என்னை பல சாலின்னு ஒத்துக்க... உன்னை எதுவும் பண் ணலை.
சிங்கம் யோசனையாய்...
ம்... நான் ஒத்துக்கு வேன். ஆனா ஒரு கண் டிஷன்.
ம்... சொல்லு... சொல்லு... என் நண்பன் நாகு கேட்டா ஆச்சர்யத்துல திகைச்சுடுவான்.... ம்...
மேலே இருந்த சிலந்தி வலையைக் காட்டி...
அதோ... அதுல இருந்து ஒரே ஒரு நூலை மட்டும் எடுத்து வா...
ஒரு நூலா? அது ஏன் உனக்கு?
காரணம் இருக்கு. அந்த நூலை யார் தொட்டாலும் அவங்களுக்கு பலமும் கூடும்; வீரனாவும் ஆகிடுவாங்க.
என்ன... நிஜமாவா சொல்ற?


நிஜந்தான். அந்த நூலைத் தொட்ட பிறகுதான் எனக்கும் பலம் வந்தது.
ஒரு நொடில கொண்டு வரேன்.
அதைக்கேட்ட நாகு...
ஏய்... கனகு! இரு... இரு... அவசரப்படாதே. நான் சொல்றதைக் கேளு...
என்னை தடுக்காதே... நான் பெரிய பலசாலியா ஆகிட்டு வந்து உன்கிட்ட பேசறேன்.
வலையைத் தொட்டதும்...
ஐயோ... நான் சிக்கிட்டேன்... காப்பாத்துங்க...
சிங்கம் சிரித்தபடியே...
என்ன பலசாலி, அலர்ற? நீதான் என்னையே மிரள வெச்சியே...?
ப்ளீஸ்... நான் செய்த தப்பை உணர்ந்துட்டேன். மன்னிச்சுடு. என் னைக் காப் பாத்து.
ஒரே அறையில் வலையை அறுத்தது சிங்கம்.
விடுபட்ட கனகு சிங்கத்திடம்
ரொம்ப நன்றி! இனிமே யார்கிட்டயும் கர்வமா நடக்கமாட்டேன்.
ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு வகையான பலம் இருக்கும். அதைப் புரிஞ்சுக்கிட்டா எப்பவுமே கர்வம் வராது!



மு. வைஷ்ணவி,
உறுப்பினர் எண் : 215,
வெள்ளமடம்.


கொசுவை கொல்வது எப்படி?

தேவையான பொருட்கள் :

ஒரு கொசு, விஷம் ஒரு பாட்டில்

செய்முறை :

முதலில் ஒரு கொசுவை சாமர்த்தியமாகப் பிடிக்க வேண்டும். பிறகு அந்தக் கொசுவுக்கு கிச்சு கிச்சு மூட்டவும். அல்லது கொசுவைப் போலவே பாடவும் செய்யலாம். அதனால் கொசுவானது வாயைத் திறந்து ஹா... ஹா... என்று சிரிக்கும். உடனே விஷத்தை அதன் வாயில் ஊற்றவும். இவ்வாறு கொசுவைக் கொல்லலாம்.





அ.க.பார்த்தசாரதி,
ஏழாம் வகுப்பு, ஆயிர வைசிய
மேல்நிலைப் பள்ளி, பரமக்குடி



பி.சந்திரகலா,
ஒன்பதாம் வகுப்பு, சாரதா
மெட்ரிக் பள்ளி, செஞ்சி



ஆ.பிரேம்குமார்,
காப்புக்காடு, குமரி





எம்.ஜோதிமணி,
ஏழாம் வகுப்பு,
கஸ்தூரிபா காந்தி
பாலிகா வித்யாலயா,
சின்னமதூர், ஏற்காடு



கைவண்ணம்!



ஆர்.ரம்யா,
ஒன்பதாம் வகுப்பு, காமராஜ்
மெட்ரிக் மே.நி. பள்ளி, ஈரோடு



மீ.தேவிபாலா,
பத்தாம் வகுப்பு, சின்மயா
வித்யாலயா, இராஜபாளையம்



மு.சாய்பிரபு,
பொன்னையா
ராமஜெயம்
பொ.மே.நி. பள்ளி,
தஞ்சை

பூமியில் இருக்கும் பெருங்கடல் பரப்புகளில் மிகப் பெரியது பசிபிக் பெருங்கடல்தான். உலக வரைபடத்தை பார்க்கும்போது, அதிகமான இடத்தை ஆக்கிரமித்து இருப்பதும் பசிபிக் பெருங்கடல் தான்.

'பசிபிக்' என்றால் அமைதி என்று பொருள். ஆனால், பசிபிக் பெருங்கடல் அமைதியாக இருந்ததில்லை. அடிக்கடி பெரும் புயலை வீசிக் கொண்டிருக்கும்.

சுனாமி அதிகம் வருவது இங்குதான். இதற்கு பசிபிக் என்று பெயரிட்டவர் 'பெர்டினாண்ட்' என்ற போர்த்துக்கீசிய மாலுமி. அவர் 1519ம் ஆண்டு ஐந்து கப்பல்களில் 237 மாலுமிகளுடன் உலக சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போதுதான் பசிபிக் கடலையும் கடந்தார். பசிபிக்கின் நீளம் சுமார் 16 ஆயிரம் கி.மீ.; அகலம் 11,200 கி.மீ.; பரப்பளவு சுமார் 12 லட்சத்து 80 ஆயிரம் சதுர கி.மீ. 'மாரியனாஸ்' என்ற தீவுக்கு அருகே பசிபிக்கின் ஆழம் 10,795 மீட்டர் ஆகும்.

இமயமலையை தூக்கி பசிபிக் கடலில் போட்டாலும், அது கடலுக்குள் மூழ்கிப் போய்விடும். அந்த அளவுக்கு பசிபிக் பெருங்கடல் ஆழமானது. பசிபிக் கடலில் ஆயிரக்கணக்கான தீவுகள் இருக்கின்றன. இவற்றில் பல எரிமலைகளின் மேற்பகுதியில் அமைந்துள்ளன. இங்கு எரிமலைத் தீவுகள் அடிக்கடி தோன்றுகின்றன.

பெரிய பவளத் தீவுகளும் இதில்






'அமைதி' இல்லாத பசிபிக்!

அமைந்துள்ளன. தென் பசிபிக் தீவுகளில் வாழ்கிறவர்களுக்கு வாழ்க்கை மிக சுலபமானது. மித வெப்பமான தட்ப வெப்பநிலை. அதனால் குளிருக்கு பயப்பட வேண்டியதில்லை. இந்தக் கடலுக்குள் பல மலைத் தொடர்கள் உள்ளன. 3,200 கி.மீ. நீளத்திற்கு ஒரு மலைத் தொடர் இருக்கிறது. 'ஹவாய்' தீவுகள் இந்த மலைத் தொடரின் பாதையில்தான் உள்ளன. 16ம் நூற்றாண்டில்தான் பசிபிக் எல்லாருக்கும் தெரிய வந்தது. 1768 முதல் 1799 வரை 'கேப்டன் குக்' என்பவர் இந்தப் பகுதி முழுவதையும் ஆராய்ந்தார். பசிபிக் பெருங்கடல் இவ்வளவு பெரிதாக இருப்பதற்கு அறிவியல் பூர்வமான விளக்கம் தரப்படுகிறது.

பூமி தோன்றிய ஆரம்ப காலத்தில், அது அவ்வளவாக இறுகி இருக்கவேயில்லை என்றும், மிக வேகமாகச் சுழலும் போது, அதிலிருந்து மிகப் பெரிய பகுதி ஒன்று பிய்த்து கொண்டு போயிற்று; அது இருந்த இடமே பசிபிக் கடலானது என்றும் கூறப்படுகிறது.

அது எப்படியானாலும், மிகப் பெரும் நீர்ப்பரப்பாக விளங்கும் பசிபிக், பயத்தையும் ஆச்சரியத்தையும் தரும் ஓர் அதிசயம்தான்! ●





சு. தங்கம்,
உறுப்பினர் எண் : 287,
ஏழாம் வகுப்பு,
கமலாவதி மேல்நிலைப் பள்ளி,
சாகுபுரம்.

சந்திராயன்



நிலவே நிலவே நில்! நில்!
நெருங்கி வந்ததும் செல்! செல்!
சந்திரன் என்பது உந்தன் பெயர்
சந்திராயன் என்பது எந்தன் பெயர்!

மயில்சாமி அண்ணாதுரை
மண்ணில் இருந்து அனுப்பினார்!
விண்ணில் உன்னிடம் வருகின்றேன்
விரைந்து முத்தம் தருகின்றேன்!

- அ.ராஜலட்சுமி, ஏழாம் வகுப்பு, சாரதா மெட்ரிக்குலேஷன் பள்ளி, செஞ்சி

மரம் வளர்ப்போம்



விண்ணிலிருந்து மழை பெறவே
வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்
கண்ணைப் போல மரம் காத்து
காடுகள் மூலம் வளம் சேர்ப்போம்


தண்மை காற்றில் கூடுதற்கு
தருமே வரமும் மரங்கள்தான்!
மண் அரிப்பைத் தவிர்த்திடவும்
மரங்கள் நன்றாய் உதவிடுமே!

மக்கள் நலனைக் காத்திடவே
மரங்கள் மருந்தாய்ப் பயன்படுமே
இன்னும் பயன்கள் கிடைத்திடவே
என்றும் மரங்கள் வளர்ப்போமே!

- ர.ரா.பாரதி கிருஷ்ணன்,
உ. எண் : 654,
அரசு உயர்நிலைப்
பள்ளி,
தருமபுரி

கவிதைப் பூங்கா

நினைவு மன்றம்



தாஜ்மஹால்கூட
சற்று
தரம் குறைந்ததுதான்.
காரணம்,
அது
தாய்க்காக எழுப்பிய...
நினைவு மன்றமல்ல!

- பா.சுதர்சன்,
உ. எண் : 624,
திருச்சி



முடியும் வரை...!

முடியும்வரை
முயற்சி செய்.
உன்னால்
முடியும்வரை அல்ல;
எடுத்த செயல்
முடியும்வரை..!

புன்னகை



கள்ளம் கபடம் இன்றியே
இருக்கும் குழந்தை உள்ளமே
சின்னஞ் சிறிய கண்களால்
சிரித்து ஆளை மயக்குமே!

உண்ணும் உணவை மறந்துமே
விரும்பி மண்ணைத் தின்னுமே!
தயக்கம் ஏதும் இன்றியே
துணிந்து எதையும் செய்யுமே!

இனிய முறுவல் ஒன்றினால்
இதயக் கவலை போக்குமே!
இன்பம் துன்பம் எதுவானாலும்
இரண்டும் ஒன்றாய்ப் பார்க்குமே!

தத்தித் தத்தி தவழ்ந்து
எங்கும் அழகாய் சுற்றுமே!
நாமும் அந்தக் குழந்தைபோல்
நாளும் மகிழ்ச்சி கொள்வோமே!

-கு.நித்யானந்தன்,
திருச்சி



மரத்தில்

ராஜா நல்ல பையன். படிப்பில் கெட்டிக்காரன், படுசுட்டி. ஆனால் முன் கோபக்காரன். அவன் பெற்றோர் எவ்வளவு சொல்லியும், அவன் அதை மாற்றிக் கொள்ளவில்லை. ஒரு விடுமுறை சமயத்தில், அவன் தாத்தா வீட்டுக்குச் சென்றான். அவனது குணத்தை அறிந்த தாத்தா அவனைக் கூப்பிட்டார்.

''என்ன தாத்தா'' என்று அலுத்துக் கொண்டே அருகில் சென்றான் ராஜா.

''நம்ம வீட்டுக்குப் பின்னால ஒரு வேப்ப மரம் இருக்குல்ல? அதுலபோய் இந்த ஆணியெல்லாம் அடிச்சுட்டு வா'' என்றார் தாத்தா.

கை நிறைய ஆணிகளை வாங்கிய ராஜா திகைத்துப் போனான்.

''இவ்வளவு ஆணியா? எதுக்குத் தாத்தா'' என்றான் ராஜா.

''போய் அடிச்சுட்டு வா. அப்புறமா சொல்றேன்'' என்றார் தாத்தா.

ராஜா முனகிக்கொண்டே சென்று

அறிவுரைக் கதை



ஆணியை அடிக்க ஆரம்பித்தான்.

நேரம் ஓடிக் கொண்டே இருந்தது.

அன்று முழுவதும் அடித்தும், அவன் கையில் பாதிக்கு மேல் ஆணிகள் மீத மிருந்தன.

ஒருவழியாக, அடுத்தநாள் மீதமிருந்த ஆணிகளை அடித்து முடித்தான்.

தாத்தாவிடம் சென்று, ''தாத்தா நீங்க சொன்ன வேலையை முடிச்சுட்டேன். இப்போ போய் நான் விளையாடட்டுமா'' என்றான்.

தாத்தா நிதானமாய் அவனைப் பார்த்து விட்டுச் சொன்னார்.

எடுத்துட்டு வா. முக்கியமான ஒரு விஷயம் சொல்றேன்'' என்றார் தாத்தா.

எரிச்சலோடு சென்ற ராஜா, அடித்த ஆணிகளைப் பிடுங்க ஆரம் பித்தான். ஆனால், அது அவ்வளவு சுலபமாயில்லை.

''என்ன இது? ஆணி அடித் ததை விட பிடுங்க அதிக நாள் தேவைப்படும் போல இருக்கே'' என்று நினைத்தான்.

அவன் நினைத்ததுபோலவே அடிக்கதேவைப்பட்டநாட்களைவிட இரண்டு நாட்கள் அதிகமாகவே தேவைப்பட்டன என்றாலும், விடாமல் ஒவ்வொரு ஆணியாகப் பறித்தான். சில வளைந்தன; சில பாதியிலேயே முறிந்தன. ஒருவழியாக முடித்தான்.

தாத்தாவிடம் சென்று ''இதோ பாருங்க, ஆணிகளையெல்லாம் பிடுங்கிட்டேன்'' என்று ஆணிகளைக் காட்டினான்.

அந்த ஆணிகளைப் பார்த்த தாத்தா,

விழுந்த துளை!

''இன்னொரு வேலை பண்ணு. நீ மரத்துல அடிச்சில்ல; அந்த ஆணியை யெல்லாம் போய் பிடுங்கிட்டு வா!''

''என்ன தாத்தா விளையாடறீங்களா? எதுக்கு அடிக்கச் சொன்னீங்க? இப்போ பிடுங்கச் சொல்றீங்க? நான் மாட்டேன்'' கோபமாய் கத்தினான் ராஜா.

''என்ன எதுக்குன்னு கேட்காம, அந்த ஆணியை முழுக்க திரும்பவும் பிடுங்கி

''நான் கொடுத்தப்போது ஆணி எப்படி இருந்துச்சு? இப்ப பாரு வளைஞ்சும் நெளிஞ்சும் போயிடுச்சு'' என்றார்.

''ஆமா, பிடுங்கும்போது கொஞ்சம்

அ.க. அப்சானா பர்வீன்,

உறுப்பினர் எண் : 487,

திருச்சி.

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No.36, New No.12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
4. Name of Publisher	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No.36, New No.12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
5. Name of Editor	:	Seetha Ravi
Nationality	:	Indian
Address	:	'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital: **Bharathan Publications Private Limited, 47-NP., Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 032.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2009

Lakshmi Natarajan
Publisher

"மரத்துல விழுந்த துளை மாதிரி, கோபத்தால ஏற்பட்ட காயம் அவ்வளவு சீக்கிரம் ஆறாது. அது ஆறினாலும் தழும்பு இருக்கும்."



வளையத்தானே செய்யும்'' என்றான் ராஜா.

''அப்படியா, சரி வா'' என்று வேப்ப மரத்தின் அருகே அழைத்துச் சென்ற தாத்தா, மரத்தைக் காட்டினார்.

''இங்க பார், மரமெல்லாம் ஓட்டை ஓட்டையா ஆயிருக்கு'' என்றார்.

''நீங்க சொன்னதாலதான் ஆணி அடிச்சேன். அதனாலதான் ஓட்டையாச்சு '' என்றான் அவன் வேகமாய்.


தாத்தா அமைதியாய் சொன்னார்.

''நீ சொல்றது சரிதான் ராஜா. நான் சொன்னதாலதான் நீ மரத்துல ஆணி அடிச்சே. நீ ஆணி அடிச்ச இல்லியா? அந்த ஆணி மாதிரிதான் கோபமும்! அந்த நேரத்துல எல்லாமே முடிந்துவிட்ட மாதிரி இருக்கும். ஆனா, மரத்துல விழுந்த துளை மாதிரி, கோபத்தால ஏற்பட்ட காயம் அவ்வளவு சீக்கிரம் ஆறாது. அது ஆறினாலும் தழும்பு இருக்கும். அந்தத் தழும்பு உன்னால உண்டானதுன்னு ஞாபகப்படுத்திகிட்டே இருக்கும். அதனால, உன் மேல யாருக்குமே பிரியம் ஏற்படாம போயிடும். அதனால எப்பவும் யார் மேலயும் கோபப்படவே கூடாது.''

ராஜா திகைத்துப் போனான். மரத்தில் தென்பட்ட துளைகள் அவனுக்குள் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்தின. விடுமுறை முடிந்து வீட்டுக்கு வந்த ராஜாவைப் பார்த்த அவன் பெற்றோர்கள், ''எப்படி இவனால் கோபத்திலிருந்து விடுபட முடிந்தது?'' என்று வியந்து போனார்கள். அதை அறிந்த தாத்தா சந்தோஷமானார்.

ஆர்.ஸ்ரீ சுவாதேஷ்,
இரண்டாம் வகுப்பு, செயின்ட்
ஜோசப் மெட்ரிக் பள்ளி,
ஒண்டிப்புதூர்













கே.எம்.கார்த்திக்,
நான்காம் வகுப்பு, கிரைஸ்ட் த கிங்
மெட்ரிக் மே.நி. பள்ளி, கும்பகோணம்

கா.சங்கீர்த்தனா,
ஐந்தாம் வகுப்பு, ஏ.என்.டி.
மெட்ரிக். பள்ளி, திருப்பத்தூர்

சுட்டீஸ் கைவண்ணம்!



எஸ்.ஜே.ஸ்ரீ மகா நித்யா,
மூன்றாம் வகுப்பு, குருஞான
சம்பந்தர் மிஷன் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
மயிலாடுதுறை

நமக்குத் தாகம் எடுத்ததும் தண்ணீர் குடிக்கிறோம். ஆனால் ஏன் தாகம் எடுக்கிறது?

நமது இரத்தத்தில் நீரும் உப்பும் ஒரே சீரான அளவில் இருக்கின்றன. அதே போல் நமது உடலிலுள்ள திசுக்களிலும் அவை ஒரே சீரான அளவில் உள்ளன.

நம்முடைய உடலிலிருந்து வியர்வை அதிகமாகவெளியேறும்போதுஇரத்தத்தி லுள்ள நீரின் அளவு குறைகிறது. அப் போது நீர், உப்பு ஆகியவற்றின் சமநிலை பாதிக்கப்படுகிறது. உடனே மூளையில் தாகத்தை உணரும் பகுதியானது அதை உணர்ந்து தொண்டைப் பகுதிக்குத் தகவல் அனுப்புகிறது.

உடனே தொண்டைப் பகுதி சுருங் கத் தொடங்குகிறது. அப்படிச் சுருங்கும் போது, அந்தப் பகுதி உலர்ந்து போகிறது. அதன் விளைவாகவே நமக்கு தாகம் ஏற்படுகிறது.

- எஸ்.தணிகைவேல், உறுப்பினர் எண் : 762, பதினொராம் வகுப்பு, சே.சா.மு. நகராட்சி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்



நிலாவில்



ஊஞ்சல் ஆடுவதினால் சில ருக்கு தலை சுற்றல், மயக்கம், வாந்தி வருகிறது இது ஏன் தெரியுமா?

மனித உடலின் சமநிலையைப் பேணும் 8வது கபால நரம்பின் வெஸ்டிபுலர்கிளையும், உள்காதில் அமைந்திருக்கும் அரை வட்டக் கால்வாய்களில் உள்ள திரவ அசை வும் ஊஞ்சலில் ஆடும்போது பாதிக்கப்படுகின்றன. அதனால், தலைசுற்றல், வாந்தி போன்றவை உண்டாகின்றன. இதுகூட தற்காலிக மானதுதான்.

- சு.அபிஷேக், உ. எண் : 518, சென்னை





நிலாவில் சில இடங்கள் ஏன் இருட்டாக உள்ளன?

பலநூறு ஆண்டுகளுக்குமுன் எரிமலை வெடித்ததால் சிதறிய குழம்புகள் நிலவில் பல பகுதிகளில் படிந்துள்ளன. அந்த இடங்கள் சூரிய வெளிச்சத்தை பிரதிபலிக்க முடியாததால், சில பகுதிகள் இருட்டாக உள்ளன.

இருள்!

எவ்வளவு உயரத்துக்கு பலூன் பறக்கும்?


ஒரு மனிதனை சுமந்துச் செல்லும் பலூன் 19 மைல்கள் வரை வானில் பறந்து செல்லும். ஆனால், யாருமே இல்லாமல் பறக்கும் பலூன்கள் 31 மைல்கள் வரை செல்லும், குழந்தைகள் விளையாடும் பலூன்கள் 10 கி.மீட்டர்கள் வரை பறந்து செல்லும்.



- எஸ்.கார்த்திகேயன்,
உறுப்பினர் எண் : 394,
ஒன்பதாம் வகுப்பு, புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு

திருவாரூர் தேரழகு; திருவிடை மருதூர் தெருவழகு; வேதாரண்யம் விளக்கழகு' என்று சொல்கிற மாதிரியே, 'மன்னார்குடி மதிலழகு' என்பார்கள். அப்படிப் புகழ்பெற்ற மன்னார்குடிதான் எங்கள் ஊர். இதை ராஜமன்னார்குடி என்றும் அழைப்பார்கள்.

எங்கள் ஊரில் மிக மிகச் சிறப்பு வாய்ந்தது ஸ்ரீ செங்கமலத் தாயார் உடனுறை ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி திருக்கோயில். கையில் சாட்டையுடன், பசுவின் மீது சற்றே சாய்ந்த கோலத்தில் காட்சி தருவார் பெருமாள்.



* 'ஸ்ரீராஜு' சாஸ்திரிகள்

இந்தியாவின் பழைமையான பத்து நகராட்சிகளை தேர்வு செய்து, நிதி உதவி வழங்கியது யுனெஸ்கோ நிறுவனம். அந்த பத்து நகராட்சிகளில் எங்கள் மன்னார்குடியும் ஒன்று.

'தென்னாட்டின் பர்தோலி' என்றும் 'இந்தியாவின் மாஸ்கோ' என்றும் எங்கள் ஊரைக் குறிப்பிட்டுச் சொல்வார்கள்.

இங்குள்ள காகிதப் பட்டறை என்ற

தி. தளபதி,
உறுப்பினர் எண் : 615,
மன்னார்குடி.



இந்தியாவின்



தெருவில் தயாரான காகிதங்கள் பற்றி பல ஆவணங்கள் கிடைத்துள்ளன. மராட்டிய மன்னர்கள் தஞ்சையை ஆண்ட சமயத்தில், அவர்கள் பயன்படுத்திய காகிதங்கள் மன்னார்குடியில் தயாரிக்கப்பட்டவைதான். தஞ்சை சரஸ்வதி மஹாலில், அந்த ஆவணங்களை இப்போதும் பார்க்கலாம்.

ஜெர்மானியப் பேரறிஞரான மாக்ஸ் முல்லரிடம் ஒருமுறை 'நீங்கள் இந்தியா செல்ல வேண்டுமானால், எதற்காகச் செல்வீர்கள்' என்று கேட்டார்கள். உடனே அவர் சொன்னார் : ''நான் இந்தியா செல்வதாக இருந்தால், அந்தப் பயணம் தமிழ்நாட்டில் மன்னார்குடியில் இருக்கும் மாமேதை ராஜூ சாஸ்திரிகள் என்னும் பெரியவரை சந்திப்பதற்காகவே இருக்கும்.''

'மன்னார்குடி பெரியவா' என்று காஞ்சி மஹா ஸ்வாமிகள் குறிப்பிட்ட ஸ்ரீராஜூ சாஸ்திரிகள் வசித்தது, இந்த மன்னார்குடியில்தான்.



எங்கள் ஊர்

மாஸ்கோ!

பொதுமக்கள் எல்லாரும் சேர்ந்து தான் தேரை வடம்பற்றி இழுப்பது வழக்கம். ஆனால், இங்குள்ள தேசிய மேல்நிலைப் பள்ளி மாணவர்களே, ராஜகோபாலஸ்வாமி மற்றும் செங்கமலத் தாயார் தேர்களை வடம்பிடித்து இழுக்கின்றனர். சுமார் எண்பது ஆண்டுகளாக இந்த மரபு பின்பற்றப்பட்டு வருகிறது.

பாத்திர வகையில் ஒன்றான செம்புகூட, 'மன்னார்குடி செம்பு' என்று குறிப்பிடப்படுவது கவனத்திற்குரியது. இன்று வரை தீராத காவிரிப் பிரச்னையை நீதி மன்றத்துக்கு கொண்டு சென்றது; 1925ம் ஆண்டிலேயே முதியோருக்கான குருகுலம் மற்றும் நடமாடும் நூலகம் அமைந்தது என்று, எங்கள் ஊரின் சிறப்புகள் ஏராளம்! ஸ்ரீவாஞ்சியம், திருவீதிமலை, திருமீயச்சூர்... போன்ற, பல பாடல் பெற்ற தலங்களைக் கொண்ட திருவாரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது எங்கள் ஊர்.

வண்ணம் தீட்டுங்கள்!

இங்குள்ள படத்தை
உங்கள் கைவண்ணத்தால்
அழகுபடுத்துங்கள்!



இரண்டு படங்களுக்கிடையே உள்ள ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



விடைகள் 56-ம் பக்கம்



வித்தியாசங்களைக் கண்டுபிடி!

✱ கண்டுபிடிக்கப்பட்ட 20 ஆண்டுகளுக்குப் பின்னரே பாராசூட் உபயோகிக்கப்பட்டது.

✱ முதல், இரண்டாவது உலகப் போரில் கலந்துக் கொள்ளாத நாடு ஸ்விட்சர்லாந்து.



✱ ஓசோன் படலத்தில் உள்ள துளையை 'ஜோசப் பார்மன்' 1985ல் கண்டுபிடித்தார்.

✱ 200 ஆண்டுகளுக்கு முன்னர் திருப்பதியில் புளியோதரைதான் பிரசாதம்; லட்டு கிடையாது.

✱ பைசா கோபுரம் போல் சீனாவில் டைகர் பகோடாவும் சாய்ந்தே உள்ளது.

- என்.நர்மதா, ஆறாம் வகுப்பு,
க்ளூனி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, புதுச்சேரி



இந்த 2009வது ஆண்டை 'சர்வதேச வானியல் ஆண்டாக' ஐக்கிய நாடுகள் பொது சபை அறிவித்துள்ளது. அதாவது 1609ஆம் ஆண்டில்தான் இத்தாலிய வானியல் நிபுணரான கலிலியோ முதன்முதலாக வானியல் ஆய்வுக்கு பிரதான தேவையான தொலைநோக்குச் கருவியைப் பயன்படுத்தினார். அதன் நினைவாகவே,

வானியல்

இந்த ஆண்டு சர்வதேச வானியல் ஆண்டாக கொண்டாடப்படவிருக்கிறது.

- த.பரதன், திருவாரூர்

தமிழ் மாதப் பழமொழிகள்

✱ சித்திரை மாதத்துப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்.

✱ ஆனி குமுறினால் அறுபது நாளைக்கு மழை இல்லை.

✱ ஆடியில் காற்றடித்தால் ஐப்பசியில் மழை பெய்யும்.

✱ ஆவணி மருதாணி அரக்காய்ப் பற்றும்.

✱ புரட்டாசி விதையாகாது; ஐப்பசி நடவாகாது.

✱ ஐப்பசி வெள்ளாமை அரை வெள்ளாமை.

✱ கார்த்திகைக்கு மிஞ்சின மழையும் இல்லை; கர்ணனுக்கு மிஞ்சின கொடையும் இல்லை.

✱ மார்கழி வெற்றிலையை மாடு கூடத் தின்னாது.

✱ தை ஈனாத புல்லும் மாசி ஈனாத

மரமும் இல்லை.

✱ மாசி மழையில் மாதுளை பூக்கும்.

- ஆர்.ஆர்.தக்ஷன்குமார்,
உ. எண் : 775, சென்னை

✱ போலியோ சொட்டு மருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு - 1954

✱ போலியோ வியாதியை தடுக்க



ஆண்டு!



மருந்து கண்டுபிடித்தவர் - டாக்டர் ஜோனஸ் சாக்

✱ செல்ஃபோன்களை சட்டப் பேரவைக்குள் தடைசெய்த முதல் மாநிலம் - மகாராஷ்டிரம்

✱ செல்ஃபோனை கண்டுபிடித்தவர் - ஜெ.பிரான்டென் பெர்கர்

✱ ஒரே பெயர் கொண்ட அமெரிக்க மற்றும் ரஷ்ய மாகாணம் - ஜார்ஜியா

- கி.ஜெய்பிரியா,
உ. எண் 378,
இன்ஃபேண்ட் பிரி.
மெட்ரிக் மேல்நிலைப்
பள்ளி, விருத்தாசலம்

✱ ஜனவரி முதல் நாளை சீனா குடியரசு நாளாக கொண்டாடுகிறது.

✱ சூடான், சிரியா, சமோவா், செக் கோஸ்லோவேகியா போன்ற நாடுகள் ஜனவரி முதல் நாளை சுதந்திர தின மாக கொண்டாடுகின்றன.

✱ 01.01.1772ல் உலகில் முதன் முதலாக பயணிகள் காசோலை லண்டனில் அறிமுகமானது.

✱ 01.01.1862ல் மணியார்டர் அனுப்பும் முறை தொடங்கியது.

✱ 01.01.1942ல் உலக நாடுகள்-சபை அதாவது ஐ.நா. சபை அமைக்கப்பட்டது.

- த.பிரகல்யா, உ. எண் : 318,
ஒன்பதாம் வகுப்பு, பொன்னையா
இராமஜெயம் பொதுப் பள்ளி,
தஞ்சாவூர்



I. 1.காடு, 2.காளான், 3.கார்னியா, 4.காட்டுமான், 5.காஞ்சிபுரம், 6.காண்டா மிருகம், 7.காப்பர்சல்பேட்.

II. 1.கொலுசு, 2.குதிரை, 3.ரம்பம், 4.ஜிலேபி, 5.பந்து, 6.கட்டில், 7.ஒட்டகம், 8.கல்கண்டு

III. 1.மில்டன், 2.நம்பியாண்டார் நம்பி, 3.பிர்லா மாளிகை, 4. கோழிக் கோட்டில், 5. சுஸ்ருதர், 6.அபா காந்தி, 7.பிந்துசாரர், 8.பங்கிம் சந்திர சட்டர்ஜி, 9.கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, 10.திப்புசுல்தான்.

IV. 5வண்டுகள், 3 சிலந்திகள்

சிலந்திக்கு 8 கால்கள்; வண்டுக்கு 6 கால்கள். எனவே மொத்தம் 5 வண்டு களும், 3 சிலந்திகளும் இருந்தால், மொத்தம் 54 கால்கள் வரும்.

ஐந்து வண்டுகளின் கால்கள் மொத் தம் 30. மூன்று சிலந்திகளின் கால்கள் மொத்தம் 24. மொத்தம் 54 கால்கள்.

V. 1.இஸ்ரேல், 2.நியூயார்க், 3.தாதா சாகேப் பால்கே விருது, 4.ஞானபீடம், 5.ஓவியத்துரை



ஐந்து வித்தி யாசங்கள் விடைகள்	
	1.வண்டு 2.புலியின் வால் 3.குடத்தில் குடம் 4.அணிலின் சட்டை 5.புலி கையில் கோடு

அன்பு நண்பர்களே...

'கோகுலம் டைஜஸ்ட்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்
(டைஜஸ்ட் பகுதி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!



மூதாட்டி தந்த முடிப்பு!

சர்க்கா சங்கத்துக்குச் சந்தா திரட்டும் பொருட்டு காந்தி மகான் ஊர் ஊராக யாத்திரை செய்தார். ஒரிஸாவில் பயணம் செய்த சமயம்...

ஒரு கூட்டத்தில் காந்தி பேசிக் கொண்டிருந்தார். அப்போது வயது முதிர்ந்த ஒரு பெண்மணி எழுந்து வந்தார். அவளை காந்திஜியிடம் நெருங்க விடாமல் சேவகர்கள் தடுத்தனர். ஆனால் அவர்களையெல்லாம் உதறிவிட்டு காந்திஜி முன் வந்து நின்றாள்.

''தரிசனம் செய்ய வந்தேன்'' என்று கூறி அவர் காலை தொட்டு விட்டு, தன் இடுப்பில் செருகியிருந்த ஒரு முடிப்பை எடுத்து அவர் பாதத்தருகே வைத்துவிட்டுத் திரும்பிப் போய்விட்டாள். காந்திஜி அதை எடுத்து வைத்துக் கொண்டார்.

சர்க்கா சங்கத்தின் கணக்கு வழக்கையெல்லாம் கவனிப்பவர் ஸேட் ஜம்னாலால் பஜாஜ். கணக்கில் வைப்பதற்காக காந்திஜியிடம் அந்த முடிப்பைக் கேட்டார். காந்திஜி கொடுக்க வில்லை.


ஜம்னாலால் சிரித்துக்கொண்டே கேட்டார் ''சர்க்கா சங்கத்துக்காக ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு செக்குகளை நான் வாங்கி வைக்கிறேனே, இந்த முடிப்பு விஷயத்தில் என்மேல் நம்பிக்கை இல்லையா என்ன?''

காந்திஜி சொன்னார் : ''இந்த முடிப்பு அந்தப் பல்லாயிரக்கணக்கான செக்குகளைவிட அரிய மதிப்புடையது. லட்சக்கணக்கான செல்வம் பெற்ற ஒருவன் அதிலிருந்து ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் தருவதொன்றும் பெரியதில்லை. ஆனால் அந்தக் கிழவி? இந்த முடிப்புதான் அவள் முழுச் சொத்துமே. என்று தோன்றுகிறது. அவள் தன் ஆஸ்தியை அப்படியே தூக்கிக் கொடுத்துவிட்டாள். அவள் நெஞ்சம்தான் எத்தனை விசாலமானது, அவள் பெரிய தியாகம் செய்துள்ளாள். அதனால்தான் என் நெஞ்சில் இந்த முடிப்புக்கு, கோடிக்கணக்கான ரூபாய்க்கும் மேற்பட்ட விலை'' என்றார்.

சு.கண்ணகி, மிட்டூர்



வி. புவனேஷ்வரி - இசை வாய்ப்பாட்டு - தனி (முதல் இடம்) பதினொராம் வகுப்பு



கே கார்த்திக் சுந்தர் - ஓவியப்போட்டி (மூன்றாம் இடம்) எட்டாம் வகுப்பு




கே.சத்தியப்ரியன் - வினாடிவினாப் போட்டி (மூன்றாம் இடம்) எட்டாம் வகுப்பு.


லிட்டில் ஸ்டார்ஸ்!

குழந்தைகளின் அறிவுக் கண்ணைத் திறந்து, அவர்களின் ஆற்றலைப் பாராட்டி ஊக்குவிக்கும் 'கோகுலம்' இதழுக்கு எங்கள் நன்றியும், வாழ்த்துகளும்! கோவை மாவட்டத்தில், 2008-09ம் ஆண்டுக்கான கலை இலக்கியப் போட்டிகள் சமீபத்தில் நடைபெற்றன. மாவட்ட அளவில் நடைபெற்ற அந்த கலை இலக்கிய விழாப் போட்டிகளில்


எங்கள் மாணவர்கள்



எஸ்.ஷ்யாம் சுந்தர் - வினாடிவினாப் போட்டி (மூன்றாம் இடம்) எட்டாம் வகுப்பு.



ஜி.பிரவீன்குமார் - கவிதைப் போட்டி (மூன்றாம் இடம்) பனிரெண்டாம் வகுப்பு.



கே. மோனிகா - ஓவியப் போட்டி (இரண்டாம் இடம்) ஐந்தாம் வகுப்பு.

எமது பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். பல பரிசுகளைப் பெற்றுள்ளனர். அதன் மூலம் தங் களுக்கும் தாங்கள் பயிலும் பள் ளிக்கும் பெருமை சேர்த்துள்ளனர். சிறப்புக்குரிய அந்த மாணவச் செல்வங்களை உங்களுக்கு அறிமுகப் படுவதில் பெருமையடைகிறோம்.

அன்புடன்,

PRINCIPAL,
Venkatalakshmi Matric. Hr. Sec. School,
COIMBATORE - 641 005

மதிப்பு எதனால்?

அன்று ஒருநாள் அதிகாலை
அழகிய கோயில் முன்பாக
நின்று இருந்த தேரிடத்து
நெருங்கி வந்தது குப்பைவண்டி!

அழுது அழுது முகம்வீங்கி
அதுமிகத் துன்பப் பட்டதனால்
அழுத குப்பை வண்டியிடம்
அன்பாய் காரணம் தேர்கேட்க,



"தினமும் நானோ இவ்வூரைத்
தெருத்தெரு வாக வலம்வந்து
சேரும் குப்பை கூளங்களைச்
சிரமப்பட்டு நீக்குகிறேன்!

ஊரைச் சுத்தம் நான் செய்தும்
ஒருவரும் என்னை மதிப்பதில்லை!
தேரே! என்னைப் பார்த்தாலே
திருப்பிக் கொள்வர் தம்முகத்தை!

விரலால் மூக்கை அடைத்தபடி
விரைந்து அப்பால் நகர்ந்துவிடும்
வேதனை மனதைச் சுடுகிறது!
விம்மி நெஞ்சு துடிக்கிறது!



நீயோ வருடம் ஒருமுறைதான்
வலமாய் வந்து போகின்றாய்!
ஆயினும் மக்கள் உன்னைத்தான்
அண்டி வணங்கித் துதிக்கின்றார்!

காரணம் என்ன சொல்தேரே!
கவலை தீர்ப்பாய் நல்தேரே!
கண்ணீர் வடித்து அழத்தானோ
கடவுள் என்னைப் படைத்தானா?"

இப்படிக் கேட்டதும் தேருக்கு
இரக்கம் வந்தது அதன்மீது.
குப்பை வண்டி முகம்பார்த்துக்
கனிவாய் தேரும் சொன்னதுவாம்:

"நீயோ உள்ளே குப்பையினை
நிதமும் சுமந்து திரிகின்றாய்!
நானோ எனக்குள் தெய்வத்தை
நயந்து சுமந்து நடக்கின்றேன்!

நண்பா! சொன்னதை நன்றாக
நினைவில் நிறுத்தி வைத்துக்கொள்.
உள்ளே உள்ளதை வைத்துத்தான்
உலகம் ஒருவரை மதிக்கிறது!"

ஆமாம் அன்புப் பிள்ளைகளே!
மனத்தில் உயர்ந்த எண்ணங்கள்
நாமும் சுமந்தால் நம்மையுமே
நாளும் போற்றி வணங்கிடுவர்

வளர்கவி

பட்டாணிச் சாமியார்!

என். சொக்கன்

இது ஒரு சாமியாரைப் பற்றிய கதை. பொதுவாக, சாமியார்கள் என்னவெல்லாம் செய்வார்கள்?

பெரிதாக தாடி வளர்ப்பார்கள், ஆண்டவனுக்குப் பூஜை செய்வார்கள், தங்களைத் தேடி வருகிறவர்களுக்கு ஆசிர்வாதம் செய்வார்கள்...

ஆனால், இந்த சாமியார் கொஞ்சம் வித்தியாசமானவர்! அவர் பெயர், கிரிகோர் ஜோஹன் மெண்டல். நிறைய புத்தகங்களைப் படிக்க வேண்டும்; பல்வேறு விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே பாதிரியாராக மாறிவிட்ட அதிசயப் பிறவி.

மெண்டலுக்கு மிகவும் பிடித்த இன்னொரு விஷயம், செடி, கொடிகள்!

மெண்டல் வசித்த தேவாலயத்தில், ஒரு நல்ல நூலகம் இருந்தது. அதற்குப் பக்கத்திலேயே சின்னதாகக் கொஞ்சம் காலி இடம்.

போதாதா? சட்டென்று அங்கே சிறிய தோட்டம் போட்டுவிட்டார். பலவகையான செடிகளைத் தேடித் தேடி வளர்க்கத் தொடங்கினார். இதற்காகவே, இயற்கை அறிவியலை ஆழ்ந்து படித்தார் மெண்டல்.

அப்போதுதான், அவருக்கு ஒரு கேள்வி எழுந்தது. 'என்னுடைய தோட்டத்தில் எல்லாத் தாவரங்களும் ஒரே மாதிரி இருப்பதில்லையே, ஏன்?'

அவர் இப்படிக் கேட்டதும், மற்றவர்கள் சிரித்தார்கள், 'என்னப்பா, உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? ஒவ்வொரு செடியும் ஒவ்வொரு மாதிரிதான் இருக்கும், கடவுள் அப்படிதான் படைத்திருக்கிறார்' என்றார்கள்.

இந்த விளக்கத்தை மெண்டல் ஏற்றுக் கொள்ளவில்லை.

'இந்த இரண்டு பட்டாணிச் செடிகளைப் பாருங்கள். இரண்டையும் நான் ஒரே நேரத்தில்தான் நட்டு வைத்தேன்; ஒரே மாதிரிதான் பராமரிக்கிறேன். இவை இரண்டும் ஒரே மாதிரிதானே வளர வேண்டும்? ஆனால் ஒரு செடி நன்கு உயரமாக வளர்கிறது. இன்னொன்று குட்டையாக நின்றுவிடுகிறது, என்ன காரணம்?''



இந்தக் கேள்விக்கு, யாரும் சரியான பதிலைச் சொல்லவில்லை.

அதனால், தாமே இதைக் கண்டுபிடித்துவிடலாம் என்று களத்தில் இறங்கினார்.

இதற்காக, தன்னுடைய தோட்டம்

முழுவதையும், பட்டாணிச் செடிகளால் நிரப்பினார் அவர், அதுவும் ஒரே மாதிரியாக இல்லாமல், பலவிதமான பட்டாணிச் செடிகளைத் தேடிப் பிடித்து வளர்க்க ஆரம்பித்தார்.

* உயரமான பட்டாணிச் செடிகள் பத்து, குட்டையான பட்டாணிச் செடிகள் பத்து
* மஞ்சள் பட்டாணிச் செடிகள் எட்டு, பச்சைப் பட்டாணிச் செடிகள் எட்டு
* ஊதா வண்ணப் பூக்களைக் கொண்ட பட்டாணிச் செடிகள் பத்து, வெள்ளைப் பூக்களைக் கொண்ட பட்டாணிச் செடிகள் பத்து.


இப்படி வெவ்வேறு வகையான செடிகளை வளர்த்த மெண்டல், இவற்றை கவனமாக நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்துக்கொண்டார். அதன்பிறகு, இவைகளைப் பலவிதமாகக் கலந்து



பரிசோதனை செய்யத் தொடங்கினார்.

அதாவது, உயரமான பட்டாணிச் செடி ஒன்றையும், குட்டையான பட்டாணிச் செடி ஒன்றையும் சேர்த்து, இன்னொரு விதையை உருவாக்குவது. இப்போது அந்த விதையை நட்டு வைத்து வளர்த்தால், உயரமான செடி கிடைக்குமா? குட்டையான செடி கிடைக்குமா?

அதுபோல, மஞ்சள் பட்டாணிச் செடியையும், பச்சைப் பட்டாணிச் செடியையும் சேர்த்துப் பார்ப்பது. இப்போது கிடைக்கும் பூச்செடியில் மஞ்சள் பட்டாணி இருக்குமா அல்லது பச்சைப் பட்டாணியா?



இப்படி பல விதமான பரிசோதனைகளை வரிசையாகப் பலமுறை நிகழ்த்திப் பார்த்தார் மெண்டல். ஒவ்வொருமுறையும் என்ன விடை கிடைக்கிறது என்று குறிப்பெடுத்துச் சேகரித்தார்.

ஒரு வருடம், இரண்டு வரும் இல்லை; முழுசாக ஏழு வருடங்கள் கடுமையாக உழைத்தார் மெண்டல். இந்தக் கால கட்டத்தில் கிட்டத்தட்ட முப்பதாயிரம் பட்டாணிச் செடிகளை ஆராய்ச்சி செய்து முடித்துவிட்டார் அவர்.

கடைசியாக, எல்லாப் பரிசோதனை முடிவுகளையும் ஒன்றாகச் சேர்த்து அலசிப் பார்த்தபோது, மெண்டலுக்கு ஏராளமான ஆச்சர்யங்கள் காத்திருந்தன; பல பெரிய உண்மைகள் புரியத் தொடங்கின. அவற்றை தொகுத்து, மூன்று விதிமுறைகளாக வெளியிட்டார் அவர்.

"ஒரு பட்டாணிச் செடி உயரமாக வளர்கிறதா, குட்டையாக வளர்கிறதா, அதன் விதை உருண்டையா, தட்டையா, மஞ்சளா, பச்சையா, அதன் பூ ஊதாவா, வெள்ளையா... இப்படி ஒவ்வொரு விஷயமும், அந்தச் செடியின் அப்பா, அம்மா யார் என்பதைப் பொறுத்துதான் அமைகிறது" என்றார் மெண்டல்.

இந்த விதிமுறை பட்டாணிச் செடிக்கு மட்டுமில்லை; மனிதர்களுக்குக் கூடப் பொருந்தும்.

நீங்கள் கூடப் பார்த்திருப்பீர்கள். பக்கத்து வீட்டில் புதுசாக ஒரு பாப்பா பிறந்தால், அதைக் கொஞ்சுகிறவர்கள், 'அப்படியே அம்மா ஜாடை' என்று ஆசையாகச் சொல்வார்கள்.

இதன் அர்த்தம், அந்தக் குழந்தையின் அம்மாவுக்குச் சின்னக் கண்கள், கூர் மூக்கு... இந்த விஷயமெல்லாம் அப்படியே அந்தக் குழந்தைக்கும் அமைந்திருக்கிறது.

இப்படி நம்முடைய உயரம், நிறம், வரக்கூடிய நோய்கள் எல்லாமே நம் முன்னோர்களிடமிருந்து வருவதுதான்.

பட்டாணிச் செடியில் ஆராய்ச்சி செய்து இந்த விஷயத்தைக் கண்டுபிடித்தவர் மெண்டல்தான். 'ஜீன்களே தோற்றம், குணம் அனைத்தையும் தீர்மானிக்கின்றன' என்பதை முதன்முதலாக உலகத்துக்குச் சொன்ன பெருமை அவருக்குத்தான் உண்டு.

அதனால்தான், கிரிகோர் ஜோஹன் மெண்டலை, அறிவியல் உலகம் 'மரபியலின் தந்தை' என்று மரியாதையுடன் அழைக்கிறது.

கோகுலம் சிறுவர் சங்கம்

பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

901. தி.சி.செம்மல், ஐந்தாம் வகுப்பு, புனித பேட்ரிக் மேல்நிலைப் பள்ளி, புதுச்சேரி.
902. தி.சி.பரிதி, ஒன்பதாம் வகுப்பு, மாருதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, புதுச்சேரி
903. எஸ்.சந்தோஷ்குமார், ஏழாம் வகுப்பு, வள்ளலார் மே.நி. பள்ளி, கும்பகோணம்
904. யாழினி சம்யுக்தா, ஏழாம் வகுப்பு, எஸ்.பி.ஓ.ஏ.பள்ளி, சென்னை
905. இரா.ரம்யபாரதி, மூன்றாம் வகுப்பு, சாய் வித்யாலயா, லால்குடி
906. எஸ்.யுவராணி, ஐந்தாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய ந.நி. பள்ளி, சென்னை
907. மு.த.ஹரிப்ரியன், ஒன்றாம் வகுப்பு, சு.சா.ம. மற்றும் தொடக்கப்பள்ளி, ஆரணி
908. ஆர். ஸ்ரீசுவாதீஷ், இரண்டாம் வகுப்பு, செயின்ட் ஜோஸஃப் மெட்ரிக் பள்ளி, ஒண்டிப்புதூர்
909. ரெ.விநோதமீனா, எட்டாம் வகுப்பு, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவரங்கம்
910. வெ.மு.பிரபு, எட்டாம் வகுப்பு, வீராசாமி முதலியார் உயர்நிலைப் பள்ளி, கோவை
911. மா.சசிசேகரன், எட்டாம் வகுப்பு, சேரன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கரூர்
912. சி.ரஞ்சிதவள்ளி, நான்காம் வகுப்பு, சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, சென்னை - 83
913. கு.ஜெ.ஷிஃபானா ஆஃப்ஸின், மூன்றாம் வகுப்பு, ஆக்ஸ்ஃபோர்டு மெட்ரிக் மே.நி. பள்ளி, கூத்தாநல்லூர்
914. ஜி.பி.ஆலன் ஸ்டுவர்ட், மூன்றாம் வகுப்பு, குட் ஷெப்பர்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்



915. எ.த.பூங்குழலி, மூன்றாம் வகுப்பு, ஸ்ரீபாலவித்யாலயா, பெரம்பூர்
916. வே.தமிழ் அழகன், நான்காம் வகுப்பு, புனித ஜான் மெட்ரிகுலேஷன் பள்ளி, கூடுவாஞ்சேரி
917. ர.சுவேதா, ஒன்பதாம் வகுப்பு, பி.ஏ.சி.ஆர். அம்மணி அம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ராஜபாளையம்
918. அ.மைதிலி, ஆறாம் வகுப்பு, ஆர்.கே.ஆர். மே.நி. பள்ளி, உடுமலைப்பேட்டை
919. ஏ.ஸ்ரீபாரதி, ஏழாம் வகுப்பு, செயின்ட் ஜோஸஃப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்
920. மி.மேரி டயானா, ஏழாம் வகுப்பு, ஸ்டெல்லா மேரிஸ் பெண்கள் உ.நி. பள்ளி, திசையன்விளை
921. பிரகதீஷ் சுப்ரமணியன், பதினொராம் வகுப்பு, தூய மரியன்னை மே.நி. பள்ளி, காரைக்கால்

922. சி.ரஞ்சிதா, பன்னிரண்டாம் வகுப்பு, கிறைஸ்ட் தி கிங் மெட்ரிக் பள்ளி, திருவிடைமருதூர்
923. கே.முத்துக்குமார், பன்னிரண்டாம் வகுப்பு, ஆயிரவைசிய மே.நி. பள்ளி, பரமக்குடி
924. ச.சர்மிளா, எட்டாம் வகுப்பு, சிக்மா மெட்ரிக் மே.நி. பள்ளி, சித்தாலப்பாக்கம்
925. ஆர்.ஈஸ்வரன், ஐந்தாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய ந.நி. பள்ளி, அந்தியூர்
926. கோ.ஜெயஸ்ரீ, சச்சிதானந்த ஜோதி நிகேதன் பள்ளி, அந்தியூர்
927. சா.ச. அரவிந்தராஜ், ஒன்பதாம் வகுப்பு, வித்யா விகாஸ் மெட்ரிக் மே.நி. பள்ளி, தஞ்சாவூர்



928. இர.முரளிதரன், ஆறாம் வகுப்பு, ஜோதி வித்யாலயா மெட்ரிக் மே.நி. பள்ளி, தஞ்சாவூர்
929. கா.ஷண்முகப்ரியா, நான்காம் வகுப்பு, ஆறுமுக நாவலர் தொடக்கப் பள்ளி, சிதம்பரம்
930. சி.பார்த்தசாரதி, முதல் வகுப்பு, அமலா மெட்ரிக் மே.நி. பள்ளி, கோபி
931. மு.ஹேமா, ஆறாம் வகுப்பு, பாரதிதாசன் மெட்ரிக் மே.நி. பள்ளி, காஞ்சிபுரம்
932. ப.கா.சங்கீர்த்தனா, ஐந்தாம் வகுப்பு, ஏ.என்.டி. மெட்ரிக் பள்ளி, திருப்பத்தூர்
933. ஜி.பி. ஆலன் ஸ்டெய்ன்ஸ், நான்காம் வகுப்பு, குட் ஷெப்பர்ட் மெட்ரிக் மே.நி. பள்ளி, மார்த்தாண்டம்
934. ஆ.பிரைட்டா, எட்டாம் வகுப்பு, இந்து மேல்நிலைப் பள்ளி, வத்திராயிருப்பு
935. ஏ.தினேஷ்குமார், ஒன்பதாம் வகுப்பு, அரசு மே.நி. பள்ளி, மாணாம்பதி
936. கி.சீ. அஜய் பாலாஜி, ஆறாம் வகுப்பு, சி.நா.ம. மெட்ரிக் பள்ளி, சிவகாசி
937. சி.மனோரஞ்சித், நான்காம் வகுப்பு, ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி மெட்ரிக் மே.நி. பள்ளி, கோவை
938. கு.சந்திரஹாசன், எட்டாம் வகுப்பு, முத்தாலம்மன் உயர்நிலைப் பள்ளி, வடபுதுப்பட்டி
939. த.மௌரியா, ஒன்பதாம் வகுப்பு, கீர்த்திமான் மெட்ரிக் மே.நி. பள்ளி, கணுவாய்
940. எம். முத்து செல்வ கணேஷ், ஒன்பதாம் வகுப்பு, நாடார் சரஸ்வதி ஆண்கள் மே.நி. பள்ளி, தேனி
941. அ.அ. திருவள்ளுவன், நான்காம் வகுப்பு, சிஷ்யா மெட்ரிக் பள்ளி, திருவண்ணாமலை
942. வ.கிஷோர் வாஞ்சீஸ்வரன், பத்தாம் வகுப்பு, சக்தி விநாயகர் இந்து வித்யாலயா, தூத்துக்குடி
943. ஆர்.சுதர்ஸன், மூன்றாம் வகுப்பு, ஸ்ரீசரவணபவா வித்யாலயா, ராஜாம்பாளையம்

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

944. ச.பிரியதர்ஷிணி, பத்தாம் வகுப்பு, ஜி.கே.ஷெட்டி விவேகானந்த வித்யாலயா, அம்பத்தூர்

945. ர.மதன் கல்யாண், எட்டாம் வகுப்பு, வேலம்மாள் மெட்ரிக் பள்ளி, சென்னை

946. ர.திவ்யா, நான்காம் வகுப்பு, வேலம்மாள் மெட்ரிக் மே.நி. பள்ளி, சென்னை

947. ஜி.வி. வெற்றிச் செல்வன், ஆறாம் வகுப்பு, சாரதா பதின்மப் பள்ளி, கோபி

948. உ.தினேஷ்குமார், ஐந்தாம் வகுப்பு, தேவி அகாடமி சீனியர் செகண்டரி பள்ளி, வளசரவாக்கம்

949. உ.சிவகுமார், இரண்டாம் வகுப்பு, தேவி அகாடமி சீனியர் செகண்டரி பள்ளி, வளசரவாக்கம்

950. ஆர்.அருண்குமார், ஐந்தாம் வகுப்பு, புனித ஸேவியர் மெட்ரிக் மே.நி. பள்ளி, திருநெல்வேலி



● தாவரங்களை வகைப்படுத்தியவர் கரோலஸ் லின்னேயஸ்.

● வண்டல் மண்ணில் அதிகமாக காணப்படும் சத்து பொட்டாசியம்; குறைவாக காணப்படும் சத்து நைட்ரஜன்.

● தாதுப் பொருட்கள் உலோகம், அலோகம் என இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றன.

- பி.சுபாஷ் சந்திரபோஸ்,
பதினொராம் வகுப்பு,
சே.சா.மு. நகராட்சி
மேல்நிலைப் பள்ளி,
காஞ்சிபுரம்





● முதன்முதலாக ஆங்கில அகராதியை தயாரித்தவர் சாமுவேல் ஜான்சன்.

● நள்ளிரவில் சூரியன் தெரியும் நாடு என்று நார்வே அழைக்கப்படுகிறது.

● ஆந்தையால் ஒரே நேரத்தில் இரண்டு கண்களாலும் இரு வேறு காட்சிகளைக் காண முடியும்.

● அமெரிக்காவின் பூர்வீக குடிமக்கள் செவ்விந்தியர்கள்.

● மணலின் ரசாயனப் பெயர் சிலிகன்.

- ஜெ.சுகாசினி,
ஒன்பதாம் வகுப்பு, சாரதா
மெட்ரிக் பள்ளி, செஞ்சி


● சீனாவில்தான் முதன் முதலில் வங்கிகளில் வரைவோலை கொடுக்கப்பட்டது

● பன்னீர்ப்பூ இரவில் மலரும்.

● கருப்புக் தங்கம் என்று



30,000







பொது அறிவு

● முதன் முதலாக இத்தாலியில் பெண்களுக்காகத் தயாரிக்கப்பட்டது - ஸ்கூட்டர்.


● நாய்க்கு மனிதனை விட பத்து பற்கள் அதிகம். அவற்றுக்கு மொத்தம் 42 பற்கள்.

● ஒட்டகத்திற்கு கழுத்து மிகவும் நீளமானது - அதில் 7 எலும்புகளே உள்ளன.

● 'ஏழையின் பசு' என்று ஆட்டை அழைக்கின்றனர்.

● ஒலிம்பிக் போட்டியில் பெண்கள் 1908ம் ஆண்டு முதல் அனுமதிக்கப்பட்டனர்

- எம்.விவேக், திருநெல்வேலி



அழைக்கப்படுவது நல்மிளகு

● இரும்பை விடக் கடினமான வாயு ராடான்.

● பௌத்தர்களின் புனித மரம் நாவல் மரம்.

- ப.புவனேஸ்வரி, ஆறாம் வகுப்பு, ஜி.பி.யு. பள்ளி, கொங்கணாபுரம், சேலம்

● புல்வகைத் தாவரமான தென்னை,

முட்கள்!



பனை போன்ற மரங்களுக்கு இலையுதிர் காலமே கிடையாது.


● ஒரு முள்ளம்பன்றியின் உடலில் சுமார் 30,000 முட்கள் இருக்கும்.

● நிலநடுக்கம் ஆரம்பமாகும் இடத்துக்கு 'எபிசென்டர்' என்று பெயர்.


- ஏ.எஸ்.யோகானந்தம், கோபி

சென்ற ஆண்டு நடந்த ஐ.பி.எல். போட்டியில் பஞ்சாப் உடனான போட்டியில்தான் ரவீந்தர் ஜடேஜாவின் அடையாளம் எல்லோருக்கும் தெரிந்தது. நெருக்கடியான அந்த ஆட்டத்தில் ஷேன் வாட்சனுடன் கைகோத்து ராஜஸ்தான் அணியை வெற்றிபெறச் செய்தார் ஜடேஜா. 'இன்னும் சில ஆண்டுகளில் இவர்தான் இந்தியாவின் சூப்பர் ஸ்டார்' என்று அப்போதே சொல்லி வைத்தார் ஷேன் வார்னே. அது இன்றைக்கு நிஜமாகியிருக்கிறது.

குஜராத் மாநிலத்தின் சௌராஷ்டிரா நகரைச் சேர்ந்த ஜடேஜா, சென்ற வருடம் நடந்த பத்தொன்பது வயதுக்கு உட்பட்ட உலகக்கோப்பை போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றதற்கு மிக முக்கியக் காரணங்களில் ஒருவர். பத்து வயது முதல் கிரிக்கெட் ஆடிவரும் ஜடேஜாவுக்கு உலகக்கோப்பை வெற்றி பெரிய திருப்புமுனை. இந்தத் தகுதி ஒன்றே அவர் ஸ்ரீலங்காவுடனான தொடருக்குத் தேர்வாக காரணமாக அமைந்தது. தனது முதல் ஒருநாள் மேட்சில் அரை சதம் கடந்து, தன்னுடைய தேர்வை நியாயப்படுத்தியிருக்கிறார் ஜடேஜா.


* ஜடேஜா

அத்லெடிக் துறையில் தமிழ் நாட்டின் பெருமையை நிலை நாட்டி வருகிறார் காயத்ரி. செயிண்ட் ஜோசப் கல்லூரியில் எம்.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் பயிலும் காயத்ரி, சமீபத்தில் நடந்த காமன்வெல்த் யூத் போட்டியில் மூன்று பதக்கங்கள் பெற்றிருக்கிறார். 4,100 மீட்டர் ரிலே போட்டியில் தங்கம்; டிரிபிள் ஜம்ப் மற்றும் 100 மீ தடை தாண்டும் போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுள்ளார். இதோ, 'இந்தியாவின் புதிய நம்பிக்கை நட்சத்திரம்' என்கிற பட்டம் காயத்ரி வசம் வந்துவிட்டது.


* காயத்ரி

'உலகின் முதல் நிலை வீரர் என்கிற ஏணியை 2010க்குள் எட்டிவிடுவேன்' என்கிறார் சாய்னா நேவால்.

ஒலிம்பிக் போட்டியில் கால் இறுதி வரைக்கும் முன்னேறிய சாய்னா, அடுத்த சில வாரங்களில் உலக ஜூனியர் பேட்மிண்டன் பட்டத்தை வென்றார்.

சாய்னாவின் பெற்றோர் இரு

நியூ



ஸ்டார்ஸ்!



* சாய்னா

வரும் ஹரியானாவின் முன்னாள் பேட்மிண்டன் சாம்பியன்கள். தற்போது ஹைதராபாத்தில் வசிக்கும் 18 வயது சாய்னா இந்திய பேட்மிண்டனின் அடையாளமான கோபிசந்தின் மாணவி. 'கோபிசந்தை சந்திக்கும்வரை நான் பேட்மிண்டனில் சாதிப்பேன் என்று கனவில்கூட நினைக்கவில்லை. அவர்தான் என்னை கொஞ்சம் கொஞ்சமாக மெருகேற்றினார்' என்று குரு வணக்கம் செலுத்துகிறார்.

'சாய்னா இன்னும் மூன்று வருடங்களில் உலகின் நெ.1 வீரர் ஆவார்' என்கிறார் குரு. ஆனால் சாய்னாவோ 'இரண்டு வருடங்களில் நெ.1 ஆகிவிடுவேன்' என்கிறார். இந்த குரு-சிஷ்யை போட்டியில் சிஷ்யையே ஜெயிக்கட்டும்.

மிக நீண்ட காலத்துக்குப் பிறகு, இந்திய டென்னிஸில் 'கிராண்ட் ஸ்லாம்' உற்சாகத்தைத் தொற்ற வைத்திருக்கிறார் யூகி பாம்ப்ரி.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஜூனியர் கிராண்ட் ஸ்லாம் போட்டியில் பங்கேற்று கோப்பையை வென்றுள்ள பாம்ப்ரி, ஆஸி. ஓபனில் வென்ற முதல் இந்தியர்.

பதினாறு வயதுடைய பாம்ப்ரியின் சகோதரிகள் அன்கிதா மற்றும் சானா இருவரும்கூட டென்னிஸ் வீராங்கனைகள்தான். டென்னிஸ் உலகில் சாதனை படைத்து வரும் பிரபல வீராங்கனைகளான மரியா ஷரபோவா, வீனஸ் சகோதரிகள் பயிற்சி பெற்றது 'நிக் போலட்டிரி டென்னிஸ் அகாடமி'யில்தான். அமெரிக்காவில் உள்ள இந்த அகாடமியில்தான் தற்போது பாம்ப்ரியும் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார். ராமநாதன் கிருஷ்ணன், ரமேஷ் கிருஷ்ணன், லியாண்டர் பயஸ் ஆகியோர் ஏற்கெனவே ஜூனியர் டென்னிஸில் கிராண்ட் ஸ்லாம் பெற்றவர்கள். அந்த வரிசையில் இப்போது 'கிராண்ட் ஸ்லாம்' பாம்ப்ரி. இந்திய விளையாட்டு அரங்கில், வெளிச்சம் பரவ ஆரம்பித்திருக்கிறது. ●


* பாம்ப்ரி

குழந்தைக் கடவுள்கள் 5

நீலாவின் கோபம்

கதை : ராகுல்
படம் : தர்மா




என்ன ஆச்சு இந்த கண்ணனுக்கு? நான் என்ன கேட்டுவிட் டேன்?
இனிமேல் அவ னைப் பார்க்கவும் கூடாது; பேசவும் கூடாது.
வேறு யாருமே வரவில்லையே, என்ன செய்யலாம்?
அவளே பானையை எடுத்து...
தலையில் அடுக்கி...
இடையிலும் கையிலும் பானையைப் பிடித்தபடி நடந்தாள்.
ம்... கண்ணன் மட்டும் உதவியிருந்தா இவ் வளவு கஷ்டமில்லை. ஏன் இப்படிச் செய்தான்?
கோபம் குறையவில்லை நீலாவுக்கு.


அவள் வீட்டு வாசலில் கண்ணன் நிற்பதைக் கண்டதும்...
ஹ்ம்... அங்கு கூப்பிட்டேன். உதவி செய்யல. இப்ப இங்க வந்து ஏன் நிற்கிறான்? அவன்கிட்ட பேசமாட்டேன்.
அவளை நெருங்கிய கண்ணன்...
என்கிட்ட தா. நான் பானையை இறக்கி வைக்கிறேன்.
ஒண்ணும் வேண்டாம். நான் பாத்துக்கறேன்.
நான் சொல்றதைக் கேளு...
அங்க உதவலை; இங்க ஏன் வந்தே?
சொல்றேன்; பானையை முதல்ல கீழே இறக்கி வெச்சுடலாம்.
ஒவ்வொரு பானையாக இறக்கி வைத்தான்.


கிளம்ப முற்பட்ட கண்ணனை நிறுத்தி...
என்ன வேகமாக் கிளம்பற? நான் கேட்ட கேள்விக்கு பதிலைச் சொல்லு.
பதிலா? இப்பத்தான் நான் சொன்னேனே? கவனிக்கலையா?
விளையாடாதே கண்ணா? புரியற மாதிரி சொல்லு.
ஆமாம். அது தான் பதில்.
எங்க பதில் சொன்ன? பானையை இறக்கி வெச்ச!
என்ன? இன்னுமா புரியலை?
நிஜம்மா புரியலை கண்ணா!
நான் எல்லாரோட சுமையையும் குறைக்க வந்தவன்! கூட்ட வரலை; அதனாலதான் உனக்கு உதவலை!
கண்ணனின் பதிலில் நீலாவே அயர்ந்து போனாள். கண்ணன் புன்னகை தவழ நின்றான்.

கடிதமாலை

வெற்றி நிச்சயம் தொடர் படித்தேன். தேர்வுக் காலத்தில் பள்ளி மாணவ, மாணவிகள் சாப்பிட வேண்டிய உணவு வகைகள், ஓய்வு எடுத்துக் கொள்ளும் நேரம், மனத்தில் தைரியத்துடன் செயல்படும் விதம் போன்ற உன்னதமான தகவல்கள் அனைத்தும் நம்பிக்கையைத் தந்தன!

- டி.எம்.முருகானந்தம், தஞ்சை



பயனுள்ள கட்டுரை!

அண்ணன்கள் கதை சொன்ன விதமும், பெற்ற பரிசும் எனக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது.

- எம்.சிவரஞ்சனி, உ. எண் : 179, ஸ்ரீமகாதேவகுருஜி மெட்ரிக்குலேஷன் பள்ளி, வலங்கைமான்

'காய்ச்சல் நோயல்ல!' கட்டுரை எனக்கு முதலில் ஆச்சரியத்தை அளித்தது. காய்ச்சலின் வகைகள் பற்றிய விளக்கம் அடிக்கடி காய்ச்சல் வரும் எனக்கு மிகவும் பயனுள்ள கட்டுரையாக அமைந்தது.

- சு.அபிஷேக், ஆறாம் வகுப்பு, உறுப்பினர் எண் : 518, சி.எஸ்.ஐ. ஈவார்ட்ஸ் மெட்ரிக் உயர்நிலைப் பள்ளி, சென்னை

காட்டின் கும்பகர்ணன் என்று சொல்லப்படும் கரடியைப் பற்றி நிறைய விஷயங்கள் தெரிந்து கொண்டோம்.

- பி.சர்வேஸ்வரன், உறுப்பினர் எண் : 456, மதுரை

அடைமொழி என்று அடுக்கிய மொழிகளில் விழிகள் பரவசித்தன. பொற்கதவு நகரமான சான்பிரான்ஸிஸ்கோ உட்பட பல இடங்களை படங்களோடு தந்த விதம் கண்கொள்ளாக் காட்சி!

- ஆர்.ஜி.சரஸ்வதி, திசையன்விளை

பொதுத் தேர்வு நெருங்கும் சமயத்தில், என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டால் வெற்றி கிடைக்கும் என்பதைத் தந்ததற்கு நன்றி!

- ஆர்.மதுமதி, மதுரை

'இளம் கதைசொல்லி 2008' என்ற திறன் போட்டித் தொகுப்பு வளம் மிக்கது என்பதை களம் இனம் காட்டியது!

- ஆர்.ஜி.காயத்ரி, மணலிவிளை

கால் நூற்றாண்டு காலமாக 'டாக்டர் பக்க'த்தில் எழுதி வரும் டாக்டர் கு.கணேசனின் மருத்துவக் குறிப்புகளைப் படித்துப் பயன்பெறும் பல்லாயிரக்கணக்கான வாசகர் கூட்டத்துள் நானும் ஒருவன்.

- ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி

'பயம் விலகினால் பாஸ்!' என்னைப் போன்ற மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. கோகுலத்தின் ஆசியுடன் நிச்சயம் தேர்வில் வெற்றி பெறுவேன்.

- எஸ்.வி.ராஜேஷ்கண்ணா, அரியலூர்

கோகுலம்

சிறுவர் சங்கம்

உறுப்பினர்களுக்கான போட்டி

டியர் குட்டீஸ்...

- நீங்கள் உறுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுவிட்டீர்களா?
- அந்தப் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ள எண்தான், உங்கள் உறுப்பினர் எண்.
- அடையாள அட்டை வந்து சேரவில்லை என்றாலும், உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட்டு, போட்டியில் நீங்கள் பங்கு பெறலாம்.
- இதுவரை உறுப்பினர் ஆகாதவர்கள், உடனே உறுப்பினராகுங்கள்.
- உறுப்பினர் கூப்பன் 67ஆம் பக்கத்தில்

☑ கதை ☑ கட்டுரை ☑ கவிதை ☑ ஓவியம் ☑ ஜோக்

ஆம்; இவ்வளவு போட்டிகளும் உறுப்பினர்களுக்காக மட்டுமே! பரிசுகளும் உண்டு. மேலும் விவரங்கள் அடுத்த இதழில்...



உட்கார முடியாத

I. 1.கை உள்ள மரம் எது?
2.எதில் விழுந்தால் அடிபடாது?
3.சாப்பிட முடியாத மீன் எது?
4.கும்பகர்ணனுக்கு பிடித்த மரம் எது?

- ஆர்.ஐஸ்வர்யா, ஆறாம் வகுப்பு, செயின்ட் பால் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

II. 1.மரியாதை இல்லாத பூ எது?
2.உட்கார முடியாத தரை எது?
3.வெயிட்டான பறவை எது?



4.உண்ண முடியாத பன் எது?

- ஆர்.சஹானா, ஏழாம் வகுப்பு, செயின்ட் பால் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

III. 1.அன்பால் மலரும் பூ, அனைவரும் விரும்பும் பூ, மனிதனுக்கே உரிய பூ - என்ன பூ?



2. குண்டு முழி ராசாவுக்கு குடலெல்லாம் பல்-அது என்ன?
3. கடல் நீரால் வளர்வான், மழை நீரால் மடிவான் - அவன் யார்?

- அ.சார்லஸ், உறுப்பினர் எண்.165, எஸ்.ஆர்.எப்.வித்யாலயா மெட்ரிக்குலேஷன் பள்ளி, சென்னை

IV. 1.மெக்கானிக் விரும்பும் சோப் எது?
2. கேட்கும் பூ எது?
3. ரத்தம் வராத காயம் எது?

-ஆர்.எஸ்.அகல்யா, ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீகாஞ்சி சங்கர வித்யாலயா, மயிலாடுதுறை

V. 1.பந்தலிலே தொங்குதடி கொத்தாத பச்சைப் பாம்பு - எது என்ன?
2.தாய் இனிப்பாள்; மகள் புளிப்பாள்; பேத்தி மணப்பாள் - அவள் யார்?
3. வாய்க்கு வேலை; காதுக்கு கானம் - அது என்ன?
4. ஒற்றைக்கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை - அது என்ன?
5. ஓடையிலே ஓடாத நீர்; உப்புக்

விடுகதை

கரிக்கும் நீர் - எது என்ன?

- ஆர்.நித்யஸ்ரீ, நான்காம் வகுப்பு, டி.வி.எஸ். ஆரம்பப் பள்ளி, மதுரை

VI. 1.அந்திவரும் நேரம்; அவளும் வரும் நேரம் - யார் அவள்?

2. அன்னநடை நடந்தாலும் அதிரும் தரைப்பகுதி - யார் அது?

3. இரவும் பகலும் ஓய்வு இல்லை; படுத்தால் எழுப்ப ஆள் இல்லை - அது என்ன?

4. ஆயிரம் பேர் அணி வகுப்பிலும் பொட்டுத் தூசி கிளம்பாது-அது என்ன?

- ஜெ.மரியானாரவீனா, 9ஆம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

VII. 1.முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை - அது என்ன?

2. வெளியில் விரியும், வீட்டில் சுருங்கும் - அது என்ன?

3. அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான்-அவன் யார்?

- த.பாரத், ஆறாம் வகுப்பு, உ. எண் : 576, யாகப்பா மெட்ரிகுலேஷன் பள்ளி, தஞ்சாவூர்




தரை?

VIII.

1.தாளைக் கொடுத்தால் தின்னும் தண்ணீர் கொடுத்தால் மடியும் - அது என்ன?

2.வட்ட வட்ட பாய்; வாழ்வு தரும் பாய்; ஊரெல்லாம் சுற்றும் பாய்; ஒவ்வொருவரும் விரும்பும் பாய் - அது என்ன?

- ஜே.டி. சாய்குரு பிரசாந்த், உறுப்பினர் எண் : 857, ஐந்தாம் வகுப்பு, அவர் ஒன் மார்டன் மெட்ரிக் மே.நி. பள்ளி, திருநெல்வேலி



விடைகள்

I. 1.முருங்'கை' மரம், 2.'ஃபோட்டோ'வில், 3.விண்'மீன்', 4.'தூங்கு மூஞ்சி' மரம்.

II. 1.'வாடா'மல்லி, 2.புளியோ'தரை', 3.கரு'டன்', 4.ரிப்'பன்'

III. 1.சிரிப்பு, 2.மாதுளம்பழம், 3.உப்பு

IV. 1.'வீல்' சோப், 2.'தா'மரை, 3.வெங்'காயம்'

V. 1.புடலங்காய், 2.பால், தயிர், நெய், 3.நாதஸ்வரம், 4.மிளகாய், 5.கண்ணீர்

VI. 1.நிலா, 2.யானை, 3.இதயம், 4.எறும்பு

VII. 1.நாக்கு, 2.குடை, 3.பந்து

VIII. 1.நெருப்பு, 2.ரூபாய்,

விடையைச் சொல்; பரிசை வெல் - 21

1. அமெரிக்காவின் பூர்வீகக் குடிமக்கள் ....

2. இரும்பைவிடக் கடினமான வாயு ....

3. இடி அமீனை ராணுவ தளபதியாக்கியவர் ....

4. செல்ஃபோனைக் கண்டுபிடித்தவர் ....

5. மரபியலின் தந்தை ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

....

வீட்டு முகவரி : ....

....

.... பின்கோடு ....

பரிசு ரூபாய் 1000/- **போட்டி**



இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 14.3.2009


அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்



926

927

928

929


930


931

932

933

934

935


936

937

938

939

940


941


942

943

944

945


946

947

948

949

950

யர் மற்றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka